பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 28 சனிக்கிழமை 14.12.2019 கதிர் 39

இனிது ரகசியம் அல்ல!



‘சபாஷ் சரியான போட்டி’.ரெலோ நிலைமை குறித்து பேசுவது என்றால் இப்படித்தான் கூற வேண்டும்.

ரெலோவிலிருந்து பிரிந்து தனிக்கட்சி தொடங்கும் ஸ்ரீகாந்தா – சிவாஜிலிங்கம் இணை, ரெலோவின் யாழ்.மாவட்ட நிலையைத் தளர்வுற வைத்து பக்கம் 02

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை மீண்டும் கையில் எடுக்கின்றார் மஹிந்தர்!

## ஐ.நா.வதிவிடப் பிரதிநிதியிடம் அவரே தெரிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 14

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகளை மீண்டும் மேற்கொள்வது குறித்துத் தாம் ஆலோசித்து வருகிறார் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கருடனான சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார். பக்கம் 03



## சம்பிக்க வெளிநாடு செல்வதற்குத் தடை!

கொழும்பு, டிசெ. 14

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க மற்றும் அவரது சாரதி வெளிநாடு செல்லமுடியாத வகையில் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்று தொடர்பில் நடக்கும் பக்கம் 03

## கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு பிரதமர் மஹிந்தர் வாழ்த்து




கொழும்பு, டிசெ. 14

பிரிட்டன் தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சியை மீண்டும் கைப்பற்றி பக்கம் 03

## நாட்டைக் காக்கும் பொறுப்பு புலனாய்வுத் துறையினரிடம்!

### யாழ்ப்பாணத்தில் கூறினார் பாதுகாப்புச் செயலர்



கொழும்பு, டிசெ.14

விடுதலைப் புலிகள் புத்துயிர்பெற முயலும் அதேவேளை தங்கள் மதத்தைப் பிழையாக விளங்கிக்கொண்டுள்ள தீவிரவாத இளைஞர் பக்கம் 03

## யாழில் ஒத்துழைக்காத சுற்றுச்சூழல் பொலிஸ்!

### சுகாதார அதிகாரிகள் குற்றச்சாட்டு


(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ். மாவட்டத்தில் உள்ள சுற்றுச் சூழல் பொலிஸார் கடமைகளை சரிவரச் செய்வதில்லை. அவர்களைச் சுற்றுசூழல் கண்காணிப்புக்குஅனுப்பாதுபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் வேறு தேவைகளுக் பக்கம் 02

## எனது அடுத்த இலக்கு யாழ். நல்லை ஆதினம்

### நித்தியானந்தா அதிரடி அறிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.14

என்னுடைய அடுத்த இலக்கு இலங்கையில் உள்ள நல்லை திருஞான சம் பக்கம் 03

## மணல் வாகன வழித்தட அனுமதி நீக்கம் வடக்கின் சுற்றுச் சூழலுக்குப் பேராபத்து

### ஐங்கரநேசன் எச்சரிக்கை




யாழ்ப்பாணம், டிசெ. 14

மணல் ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்குரிய வழித்தட அனுமதியைப் புதிய அரசு நீக்கியுள்ளதால் வடக்கில் மணற்கொள்ளை பெரும் வேகம் எடுத்துள்ளது. பக்கம் 03

## வழிபாட்டுத் தலங்களுக்குள் பொலித்தீன் தடை வேண்டும்

### வலியுறுத்துகின்றார் நாமல் எம்.பி.




கொழும்பு, டிசெ. 14

வழிபாட்டுத் தலங்களில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பயன்பாட்டைப் படிப்படியாக தடை செய்யவேண்டுமென வலியுத் பக்கம் 03

## நித்தியானந்தாவுக்கும் எமக்கும் எந்தத் தொடர்புமே கிடையாது!

### நல்லை ஆதீன குருமுதல்வர் விளக்கம்



யாழ்ப்பாணம், டிசெ. 14

நல்லை ஆதீனத்துக்கும் சுவாமி நித்தியானந்தாவுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம பக்கம் 03

## நுளம்புகளுக்குப் புகை அடிக்கும் இயந்திரங்களுக்குப் பற்றாக்குறை

### வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ். மாவட்டத்தில் நுளம்புகளுக்குப் புகை அடிக்கும் 19 இயந்திரங்களில் பத்து இயந்திரங்கள் பழுதடைந்துவிட்டமையால் உள்ளூராட்சிச் சபைகள் ஒவ்வொன் பக்கம் 03

## பளை விபத்தில் இருவர் மரணம்!



கிளிநொச்சி, டிசெ. 14

கிளிநொச்சி – பளை, கரந்தாய் சந்தியில் நேற்று மதியம் 12 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர் பக்கம் 03

## வடக்கு மாகாணத்தில் 7,511 பேருக்கு டெங்கு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 14

வடக்கில் அதிகரித்து வரும் டெங்கினால் பாதிக்கப்பட்டு 7,511 நோயாளர்கள் இணங்காணப்பட் பக்கம் 03

# அனைத்து உள்ளூராட்சிச் சபைகளிலும் கழிவுப்பொருள் சேகரிப்பு நிலையங்கள்

## யாழ்ப்பாணத்தில் விரைவில் உருவாக்கத் தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ.14

**யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் கழிவுப் பொருள்களைச் சேகரிக்கும் நிலையங்களை உருவாக்குவது என யாழ்.மாவட்ட டெங்கு ஒழிப்புத் தொடர்பான விசேட கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

**யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் டெங்கு ஒழிப்புத் தொடர்பான விசேட கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.**

இந்தக் கலந்துரையாடலில் யாழ். பிரதேச செயலர் தி.சுதர்சன் இந்த விடயத்தை முன்வைத்தார். இதனை ஆராய்ந்து அதனை நடைமுறைப்படுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் டெங்கு நுளம்புகள் பரவுவது தொடர்பில் நீண்ட விவாதம் நடைபெற்றது. இதில் அதிகாரிகள், டெங்கு கட்டுப்பாடுகள் தொடர்பில் எவ்வளவு முயற்சிகள், நடவடிக்கைகள் எடுத்தாலும் மக்கள் தங்களின் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதில் சரியாகச் செயற்படும் வரை நாம் இலக்கை அடைய முடியாது என்பதைச் சுட்டிக் காட்டினர்.

டெங்கு நுளம்புகளுக்கு புகைகள் அடிக்கப்பட்டாலும் வீடுகளில் உள்ள கழிவுப்பொருள்களை முகாமைத்துவம் செய்து உரிய முறையில் அகற்றும் வரை அவ்விடங்களில் நுளம்புக் குடம்பிகள் ஊடாகப் பெருக்கம் அதிகமாகவே இருக்கும். எனவே மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள கழிவுப் பொருள்களை முகாமைத்துவம் செய்து உரிய இடங்களில் போட வேண்டும்.

அவ்வாறான முறைமைக்கு அனைத்து உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாகவும் ஒவ்வொரு வட்டாரத்திலும் கழிவுப் பொருள்கள் சேகரிப்பு நிலையங்கள் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறு உருவாக்கப்படும் நிலையங்களில் இரண்டு தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்படவேண்டும். மேலதிகமாகக் கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்பட்டு கண்காணிப்பும் நடைபெற வேண்டும்.

இவ்வாறு செய்யும் பட்சத்தில் மக்கள் பொது இடங்களில் குப்பைகளைக் கொட்டுவது குறைவடையும். உடனடியாக இதனைச் செய்ய வேண்டும் எனக் கோரப்பட்டது.

இந்தக் கோரிக்கைக்கு அனைத்து உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும் சம்மதம் தெரிவித்தனர். (ஐ-07)

## சூரியசக்தி ஓட்டோ அறிமுகம்



கொழும்பு, டிசெ. 14

சூரிய எரிசக்தியின் மூலம் செயற்படும் ஓட்டோ முதன் முறையாக நாட்டில் நேற்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

சுற்றாடலுக்குப் பொருத்தமான ஓட்டோவாக இது அறிமுகப் படுத்தப்படுகின்றது என்று பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.


அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மீலக்க அரங்கில் இது தொடர்பான நிகழ்வு இடம்பெற்றது.

கொரிய நாட்டு அரசின் ஒத்துழைப்புடன் இது தொடர்பாக திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. சூரிய சக்தி பனல் ஒன்றின் மூலம் இலத்திரனியல் சக்தியை உற்பத்தி செய்யக்கூடிய பற்றரி இதில் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இதன் செயற்பாட்டுக்கு தேவையான எரி சக்தி உற்பத்தி செய்யப்படுகின்றது. (ஐ)

## கண்டேன் கைலாசம் நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,டிசெ.14

கடந்த 17.11.2019 அன்று லண்டனில் வெளியிடப்பட்ட டாக்டர் பரமேஸ்வரஐயர் அம்பிகாபதி அவர்களின் கண்டேன் கைலாசம் நூலின் அறிமுகவிழா நாளை 15 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் யாழ்ப்பாணம், கந்தர்மடம் பழம்வீதி ஸ்ரீ சித்தி விநாயகராலயத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குப் பயன்படுத்துகிறார்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பாகச் சிறப்பு கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட சுகாதார அதிகாரிகள் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

அவர்கள் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களில் சுற்றுசூழல் பாதுகாப்புப் பிரிவு ஒன்று உள்ளது. அதற்குப் பிரத்தியேகமாகப் பொலிஸாரும் கடமையில் உள்ளனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுச்சூழல் பொலிஸார் அந்தக் கடமையைச் செய்வதில்லை. ஒரு சில பொலிஸார் மட்டும் டெங்குக் கட்டுப்பாட்டுச் சோதனை செய்யும் போது சுகாதார அதிகாரிகளுடன் வருகின்றனர். எனினும் பெரும்பாலான இடங்களில் பொலிஸார் கடமைக்கு வருவதில்லை.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் உள்ள சுற்றுச்சூழல் பொலிஸாரை அந்தந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் தங்களின் வேறு கடமைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். முதலில் சுற்றுச்சூழல் பொலிஸாரை யாழ்ப்பாணம் முழுவதும் பணியில் அமர்த்த வேண்டும். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தற்போது சுற்றுச் சூழல் பொலிஸாரின் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப் பட்டுவரும் நிலையில் யாழ்ப்பாணத்தில் அவர்களின் சேவைகள் முடங்கியுள்ளன.

எனவே அவர்களை முழுமையாகக் கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனெனில் சுகாதாரச் சீர்கேடு அல்லது சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையை மிக விரைவாக முன்னெடுக்க அவர்களினால் மட்டுமே முடியும். எனவே இதில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்–என்றனர். (ஐ-07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடும் என்பதுதான் பொதுவான அரசியல் நோக்கர்களின் கருத்து. அதையும் ஒரு தடவை நேரில் ஒரு கை பார்த்துவிடலாம் என்று தீர்மானித்துள்ளதாம் ரெலோ தலைமை.

அதற்காக ரெலோ தலைமை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் தனது யாழ். மாவட்டக் கிளை உறுப்பினர்களைக் கூட்டம் – கலந்துரையாடல் – ஒன்றுக்கு அழைத்துள்ளது. ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. உட்பட முக்கிய பிரமுகர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுகின்றனர். கூட்டத்துக்கு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் ஓடியாடி ஏற்பாடு செய்து வருகின்றார்.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால் சிறிகாந்தா – சிவாஜி இணை தனது புதிய கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தை இன்று நடத்துவதாக இருந்தது. அதனை நாளை ஞாயிற்றுக் கிழமை காலை நடத்துவதற்கு இப்போது தீர்மானித்திருக்கின்றது.

ஆக, நாளை முற்பகல் யாழ். கோவில் வீதியில் உள்ள முன்னாள் ரெலோவின் யாழ். அலுவலகம் இயங்கிய கட்டடத்தில் ரெலோவிலிருந்து பிரிந்து தனிக்கட்சி தொடங்குவோரின் கூட்டம்.

அதேசமயம், யாழ்.நாவலர் வீதியில் உள்ள நாவலர் மண்டபத்தில் ரெலோவின் யாழ்.மாவட்டக் கலந்துரையாடல்.

ஒரே சமயத்தில் இரண்டு தரப்புகளும் பலப்பரீட்சையை நடத்தத் தயாராகி விட்டமையால்தான் 'சபாஷ்! சரியான போட்டி!' – என்றேன்.

ஊடகவியலாளர்கள்தான் பாவம். தலையை பிய்த்துக் கொள்ள வேண்டியிருக்கும். ஓடி ஓடி இரண்டு இடத்திலும் நோண்டிப்பிடித்துச் செய்திகளைத் துழாவ வேண்டியிருக்கும்.

சில சமயம், இரண்டு கூட்டங்களும் முடிந்த கையோடு அதன் தலைவர்கள் ஊடக சந்திப்புக்களை நடத்த முற்பட்டால் இரண்டிலும் ஏறத்தாள ஒரேசமயத்தில் பிரசன்னமாகி செய்தி சேகரிக்க வேண்டிய நெருக்கடி – இக்கட்டு – ஏற்படும்.

ஆனாலும், நமது யாழ். மாவட்டச் செய்தியாளர்கள் அசகாயசூரர்கள். நிறுவனங்கள், ஊடகங்கள் கடந்து தங்களுக்குள் பங்குபோட்டுப் பணியைப் பிரித்துச் செய்து தாம் சார்ந்த ஊடக நிறுவனத்தை எப்படியும் திருப்திப்படுத்திவிடுவார்கள்.

அவர்களின் சோகக் கதை குறித்து ஒருநாள் இப்பந்தியில் வாசகர்களுடன் பகிர்வேன். பெரும்பாலும் முகத்தை வெளிப்படுத்தாத அந்தப் பணியாளர்களின் அற்புதத் திறமையால்தான் ஏதோ எங்கள் காலம் ஓடிக் கொண்டிருக்கின்றது என்பேன். 'கண்ணன் என் சேவகன்' போல அவர்கள் நமக்கு வாய்த்துள்ளார்கள். அவர்கள் குறித்து இன்னொரு நாள் பேசுவோம். இனி விடயத்துக்கு வருவோம்.

தமது புதிய கட்சியின் பெயரில் 'தமிழ்', 'தேசியம்' என்ற இரண்டு சொற்களும் இருப்பது கட்டாயம் என்று கருதுகிறார்கள் ஸ்ரீகாந்தா – சிவாஜி இணை. அதனால் 'தமிழ் தேசியக் கட்சி' என்ற பெயருடன் ஆரம்பிக்கலாம், பின்னர் தமிழர் தாயகத்துக்கு வெளியில் அரசியல் நடவடிக்கைககளை விஸ்தரிக்கும் போது – கட்சியாக அதைப் பதிவு செய்யும் போது – 'இலங்கை தமிழ்த் தேசியக் கட்சி' என்று பதியலாம் என இப்போதைக்கு யோசனை போலும்.

'தமிழர்' என்ற பதம் பயன்படுத்தினால் அது தமிழ்ப் பேசும் முஸ்லிம்களை ஒதுக்கியதாகி விடும் என்ற கருத்து வரும் என்பதால் 'தமிழ்' என்ற பெயரையே பயன்படுத்துவது உசிதம் எனக் கருதுகின்றார்கள் போலும்.

நல்லது. ஆனால், 'தமிழர் தேசியம்' வேறு; 'தமிழ்த் தேசியம்' வேறு என்ற அர்த்தம் வருமோ தெரியவில்லை 'தமிழ்த் தேசியம்' என்பது வடக்கு – கிழக்குத் தமிழர்களின் தனித்துவத் தேசியத்தையும் முஸ்லிம்களின் தேசியத்தையும் சேர்த்து உள்ளடக்குமா என்ற கேள்வியும் எழும்.

நாளை புதிய கட்சியின் அங்குரார்ப்பணத்தின் பின்னர் அது பற்றிய ஊடக சந்திப்பில் அந்தக் கட்சியின் முக்கிய பிரமுகர்களாக இருக்கப் போகின்ற ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம், சபா.குகதாஸ் போன்றோர் இந்த சர்ச்சைக்கு சரியான விளக்கம் தருவர் என எதிர்பார்க்கலாம்.

ரெலோ மற்றும் அதிலிருந்து கிளைத்துப் புதியதாக உருவாகும் தமிழ்த் தேசியக் கட்சி ஆகிய–வற்றைப் பொறுத்தவரை நாளை மிக முக்கிய நாள்.

அதேசமயம் தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை இன்று முக்கிய நாள். இலங்கைத் தமிழர்களின் கடந்த ஐநூறு ஆண்டு கால சரித்திரத்தில் தமிழர் தேசத்தின் இறைமையுள்ள இராஜதந்திரிபோல சர்வதேசத்துடன் ஊடாட்டம் நடத்திய மதியுரைஞர், தத்துவாசிரியர் அரசியல் விற்பன்னர் அன்ரன் பாலசிங்கத்தின் பதின்மூன்றாவது நினைவு தினம் இன்றாகும்.

தமிழர் தேசத்தின் இயலுமை, இயலாமையை முற்கூட்டியே உயத்துணர்ந்து உரைத்த தீர்க்கதரிசி அவர். அந்தத் தீர்க்கதரிசனத்தை சரியாகப் பயன்படுத்தாமையே இன்றைய எமது இழி நிலைக்குக் காரணம். அவ்விடயம் கூட பேசாப் பொருளாக – பேசமுடியாத பொருளாக – இன்னும் இருப்பதும் நிஜம் தான்!

– மின்னல்–

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர். இதில் யாழ். மாவட்டத்தில் மட்டும் 6,267 பேர் இணங்காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், இந்த டெங்கு நோய்த் தாக்கத்தால் வடக்கில் 4 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

அதிகரித்து வரும் டெங்கு நோய்த்தாக்கம் தொடர்பில் யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மைக் காலமாக வடக்கில் டெங்கு நொயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. இந்த நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் இந்த நோயின் தாக்கத்துக்குள்ளாகி வடக்கு மாகாணத்தில் 7511 பேர் இணங்காணப்பட்டுள்ளனர். இதில் யாழ் மாவட்டத்திலேயே அதிகளவிலானோர் இணங்காணப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

6,267 பேர் யாழ் மாவட்டத்தில் இணங்காணப்பட்டிருக்கின்றனர். அதேபோன்று வவுனியா மாவட்டம் உட்பட வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் இந்த நோய்த் தாக்கம் இருக்கிறது. குறிப்பாக. யாழ்ப்பாண மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் மாநகர பகுதி, நல்லூர், கோப்பாய் பகுதிகளில் தீவிரமாக உள்ளது.

அதிலும் யாழ். மாநகர சபைக் குட்பட்ட பகுதியில் இதுவரை 1,591 நோயாளர்களும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 673 நோயாளர்களும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 676 நோயாளர்களும் இணங்கானப்பட்டுள்ளனர். அதேபோன்று யாழ். மாவட்டத்தின் ஏனைய இடங்களிலும் கணிசமான அளவு நோயளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுத்துள்ளோம். பல கூட்டங்களை பல இடங்களிலும் நடத்தியுளளோம். ஆனாலும் இதில் எங்களுக்கு முக்கிய சவாலாக இருப்பது திண்மக் கழிவு முகாமைத்துவம். திண்மக் கழிவு முகாமைத்தவதற்துக்குப் பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்குவது மிகக் குறைவாக உள்ளது. இதனால் உள்ளூராட்சிச் சபைகள் பெரிய சவாலை எதிர்நோக்கியுள்ளன.

குறிப்பாகத் திண்மக் கழிவுகளைத் தரம் பிரித்து வழங்கவேண்டிய அவசியம் இருக்கின்றது. ஆனால் பொதுமக்கள் அவ்வாறு செய்வது மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே திண்மக்கழிவுகளைப் பொது மக்கள் தரம் பிரித்து வழங்க வேண்டுமென பொதுமக்களிடம் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். திண்மக் கழிவகற்றல் மாவட்டத்தில் குறிப்பாக மாநகரகத்தில பெரிய சவாலாக உள்ளது.

பல காணிகள், வீடுகள் நீண்ட காலமாகப் பராமரிப்பற்ற நிலையில் இருக்கின்றன. இவற்றில் பற்றைக்காடுகள் பெருகி டெங்கு நுளம்பு பெருகும் நிலை உள்ளது. ஆகவே அந்த உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. நுளம்பு உற்பத்தியாகவும் இடங்களை ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களும் சுத்தம் செயவேண்டும். பொது இடங்களிலும் உரியவர்கள் சுற்றாடலைச் சுத்தமாகப் பேண வேண்டும் – என்றார். (ஐ-07)

## நாட்டைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவொன்று நாட்டின் அமைதி நிலையைக் குழப்புவதற்கு முயலுகிறது. இந்த வேளையில் இவ்வாறான சக்திகளைக் கண்காணித்து நாட்டைப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் புலனாய்வு அமைப்புகள் ஆற்றவேண்டிய பங்களிப்பு முக்கியமாக உள்ளது.

– இவ்வாறு பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த அவர் படையினர் மத்தியில் உரையாற்றுகையில் இதனைக் கூறினார் என்று பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

முஸ்லிம் தீவிரவாத சக்திகள் நாட்டில் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன. அவை நாட்டின் பொருளாதாரத்தை அழித்துள்ள அதே வேளை, சந்தேகத்தையும் அச்சத்தையும் உருவாக்கியுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து முழுமையான விசாரணைகள் அவசியமாகும். இந்தப் பயங்கரவாத தாக்குதல்களுக்கு யார் காரணம் என்பதைக் கண்டறியவேண்டும்.

இது பௌத்த நாடு, மக்களுக்கு தமது சொந்த மதங்களை பின்பற்றுவதற்கான உரிமையுள்ளது. அனைத்து மதத்தினரும் அமைதியாக வாழக்கூடிய சூழலை ஏற்படுத்துவது படையினரின் கடமையாகும் – என்றார். (ஐ-07)

## நல்லிணக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 2010 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தவேளை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்திருந்தார். 2002 பெப்ரவரி 27 ஆம் திகதி கைச்சாத்தான யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏன் தோல்வியில் முடிவடைந்தது என விசாரணை செய்யுமாறு அந்த ஆணைக்குழுவுக்கு ஆணை வழங்கப்பட்டிருந்து. இதன் மூலம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள், எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரை செய்யுமாறும் இந்த ஆணைக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த ஆணைக்குழு 18 மாத விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் 2011 நவம்பரில் தனது பரிந்துரைகளை முன்வைத்திருந்தது.

எனினும், அது தொடர்பில் ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை எனப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

மீண்டும் ஆட்சியேற்றுஇருக்கும் ராஜபக்ஷ தரப்பினர் சர்வதேச நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றனர். சர்வதேசத்துக்கும் அரசு கொடுத்த வாக்குறுதிகளை அது நிறைவேற்றவேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டு வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கதாகும். (ஐ)

## பளை விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இருந்து சென்ற பஸ் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் உயிரிழந்தனர்.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, சம்பவ இடத்தில் இருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டது என தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## எனது அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பந்தர் ஆதீனம்தான் எனச் சர்ச்சைக்குரிய சாமியார் நித்தியானந்தா தாம் வெளியிட்டுள்ள புதிய காணொலியில் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய சாமியார் நித்தியானந்தா தனது முகநூல் பக்கத்தில் புதிய காணொலிகளை வெளியிட்டு வருகிறார்.

அவர் வெளியிட்டுள்ள புதிய காணொலியில் தெரிவித்துள்ளவை வருமாறு:–

சிவத்தை உணர்ந்தால் உங்களுக்குள் கைலாசா உருவாகும். என்னுடைய அடுத்த இலக்கு இலங்கையில் உள்ள நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்தான்.

நான் அரசியல் பற்றி பேச வரவில்லை. ஆனால் ஒரு வியம் சொல்ல விரும்புகிறேன். அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்பட்டால் இந்தியா பொருளாதார ரீதியாகச் செழிக்கும்.

ஏனெனில் சமூகத்துக்கு பங்களிப்பதுதான் ராமரின் கொள்கை. அயோத்தியில் ராமர் கோவில் கட்ட யார் நிதி அளித்தாலும் அது இந்திய பொருளாதாரத்துக்குப் பங்களிப்பது ஆகும்.

நான் எந்த அமைப்பிலும் இல்லை. எனது சீடர்களும் சந்நியாசிகளும் உங்களால் முடிந்த அளவுக்கு ராமர் கோவில் கட்டுமானத்தில் பங்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நான் எனது வழியில் ராமர் கோவிலுக்குப் பங்களிப்பேன். என்னிடம் ஒன்றும் இல்லை என நான் கூறப் போவது இல்லை. லட்சுமி என்னுடன் இருக்கிறாள் – என்றார்.

இவ்வாறு காணொலியில் பேசிய அவர் திடீரென இராவணனைச் சாடினார்.

இராவணன் நேரடியாகக் கைலாசத்தைத் தொட்டு தூக்க முயன்றான். கைலாசத்தில் உள்ள சிந்தாமணி மண்டபம்தான் கைலாசத்தின் அருள் பொலிவுக்குக் காரணம் என நினைத்தான். உடனே எனக்கு அந்த மண்டபம் வேண்டும் எனச் சிவனிடம் கேட்டான். சிவனும் எடுத்துக்கொள் என்று கூறிவிட்டார். இந்த முட்டாள் ஈராவணனும் அந்த சிந்தாமணி மண்டபத்தை எடுத்து இலங்கையில்தான் வைத்தான் என்று கூறியுள்ளார். (ஐ)

## நித்தியானந்தாவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

இதனை நாம் சர்ச்சைக்குரிய கருத்தாகவே பார்க்கின்றோம். சுவாமி நித்தியானந்தாவுக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்புகளும் இல்லை. எமது இந்து மதப் பணிகளுக்கு இடையூறு வரும் வகையிலும் எமக்குக் குடைச்சல் கொடுக்கும் வகையிலும் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் சர்ச்சைக்குரியவரான நித்தியானந்த தனது முகநூலில் வெளியிட்டுள்ள காணொலியில் தனது அடுத்து இலக்கு இலங்கையில் உள்ள நல்லை ஆதீனம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் பதிலளிக்கும்போதே நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இந்தக் கருத்தை வெளியிட்டார். (ஐ)

## சம்பிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை அடிப்படையாக வைத்து இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (ஐ)

## மணல் வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு கட்டுப்பாடற்ற முறையில் மணல்வளம் சுரண்டப்படுவதால் விரைவில் மணல் வளத்துக்குப் பற்றாக்குறைவு ஏற்படவுள்ளதோடு, வடக்கின் சுற்றுச் சூழலுக்கும் பேராபத்து நிகழவுள்ளது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு அவசியமாக இருந்த வழித்தட அனுமதியை அரசாங்கம் அண்மையில் நீக்கியுள்ளது. இது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் –

மணல் ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்குரிய வழித்தட அனுமதியைப் புதிய அரசு நீக்கியுள்ளதால் வடக்கில் மணற்கொள்ளை பெரும் வேகம் எடுத்துள்ளது. இவ்வாறு கட்டுப்பாடற்ற முறையில் மணல்வளம் சுரண்டப்படுவதால் விரைவில் மணல் வளத்துக்குப் பற்றாக்குறைவு ஏற்படவுள்ளதோடு வடக்கின் சுற்றுச்சூழலுக்கும் பேராபத்து நிகழவுள்ளது.

மணல்வளம் கட்டுமானத்துக்கும் அபிவிருத்திக்குமான வளம் மாத்திரம் அல்ல,

கரையோர மணற் குன்றுகள் கடல்நீர் உட்புகுவதைத் தடுக்கும் அரண்களாகப் பயன்படுவதோடு, நிலத்தடி நீர் மட்டத்தின் அளவிலும் பாரிய செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. நிலத்தின் அடியில் கடல்நீரில் மிதந்து கொண்டிருக்கும் நன்னீர் வில்லையின் தடிப்பை மணற்குன்றுகளின் உயரமே தீர்மானிக்கின்றது. மணற்குன்றுகளின் உயரம் குறையக்குறைய நிலத்தின் கீழே நன்னீர் வில்லையின் தடிப்புக் குறைந்து, அவ்விடத்தைக் கடல்நீர் ஆக்கிரமிக்கின்றது. மண்கும்பான் என்ற நன்னீர் கிராமம் இன்று குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டுக்கு ஆளாகியிருப்பதன் பின்னணி இதுதான்.

இதற்கு முன்னரும் சட்ட விரோத மணல் அகழ்வு இடம் பெற்றிருந்தாலும் , அதனை ஏற்றிச் செல்வதற்கான வழித்தட அனுமதி மணற்கொள்ளையை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தி வைத்திருந்தது. தற்போது வழித்தட அனுமதி தேவையற்றதாக்கப்பட்டு காவல்துறையின் சோதனைக் கெடுபிடிகள் இல்லை என்றதும் சட்டவிரோத மணல் அகழ்வு விஸ்வரூபம் பெற்றுள்ளது. இது மண்கும்பானில் மணல் ஏற்றிய உழவூர்திக்குத் தீ வைக்கும் அளவுக்கு கடலோரக் கிராமங்களில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

அபிவிருத்தியில் ஏற்படும் தாமதங்களையோ அல்லது வேறு காரணங்களையோ அடிப்படையாகக்கொண்டு அரசாங்கம் வழித்தட அனுமதியைத் தேவையற்றதாக்கும் முடிவை எடுத்திருக்கலாம். இம்முடிவு தென் இலங்கையின் சுற்றுச்சூழலுக்கு ஏற்புடையதாகவும் இருக்கலாம். ஆனால், நிலத்தடி நீரை உயிர் ஆதாரமாகக்கொண்ட வடக்கின் சுற்றுச் சூழலுக்கும், வடக்கின் நிலைத்த அபிவிருத்திற்கும், இம் முடிவு எவ்வகையிலும் பொருத்தம் அற்றதாகும்.

நடைமுறையில் இருக்கும் மணல் அகழ்வுக்கான அனுமதியினால் மட்டும் மணற்கொள்ளையையோ, அதன் காரணமாக ஏற்படவுள்ள சுற்றுச்சூழல் பிரச்சினைகளையோ ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது. இதனைக் கருத்திற் கொண்டு, நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் வழித்தட அனுமதி நீக்கத்தினால் வடக்குக்கு ஏற்படவுள்ள பாதிப்புகளை அரசுக்கு எடுத்து சொல்லி மீளவும் அதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு உடனடியாக ஆவன செய்யவேண்டும் – என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## நுளம்புகளுக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் குறைந்தது இரண்டு இயந்திரங்களைக் கொள்வனவு செய்து தரவேண்டும் என வடக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் டாக்டர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் தலைமையில் யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலிலேயே இந்தக் கோரிக்கையை அவர் முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பணத்தில் நுளம்புகளுக்கு புகை அடிக்கும் 19 இயந்திரங்களில் 10 இயந்திரங்கள் முற்றாகப் பழுதடைந்துவிட்டன. மிகுதியாக உள்ள 9 இயந்திரங்களை வைத்தே மாவட்டம் முழுவதும் புகை அடித்து வருகின்றோம். புகை அடிக்கும் இயந்திரங்கள் தொடர்பில் சரியான பராமரிப்பு முறைமை இருக்காமையினாலேயே இவை அனைத்தும் பழுதடைந்துள்ளன.

மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சிச் சபைகளிடமும் நாம் முக்கிய கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றோம். ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபையும் குறைந்தது நுளம்புகளுக்கு புகை அடிக்கும் இரு இயந்திரங்களையாவது கொள்வனவு செய்து தர வேண்டும்.

அப்போதுதான் உள்ளூராட்சிச் சபைகளும் சுகாதார சேவைகள் பணிமனையுடன் இணைந்து மக்களுக்கான சேவைகளைச் செய்ய முடியும். எனவே அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களும், செயலாளர்களும் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டும். – என்றார். (ஐ-07)

## வழிபாட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பக்கத்தின் ஊடாக இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

வழிபாட்டுத்தலங்கள் மட்டுமல்லாது, நாட்டின் கரையோரப் பகுதிகளிலும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பயன்பாடு படிப்படியாகத் தடை செய்யப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் ஆகியவற்றை மீள் – சுழற்சி செய்வதன் மூலம் புதிய உற்பத்திகளை உருவாக்குதலானது, சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களுக்கான புதிய ஆரம்பமாக இருக்கும் எனவும் நாமல் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

## கொன்சர்வேட்டிவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தலைமையிலான கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்த்தை மஹிந்த தனது ருவிட்டர் பக்கத்தில் நேற்று பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், நான் கொன்சர்வேட்டிவ் கட்சிக்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். பொரிஸ் ஜோன்சனின் தீர்க்கமான தலைமை இந்த வெற்றிக்கு வழிவகுத்தது என்பதில் சந்தேகமில்லை. பிரதமராக இருந்து அவரது மிகச் சிறந்த சேவையை பாராட்டுகிறேன் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## நீதித்துறைக்குப் புதிய சவால்!

தென்னிலங்கை ஆட்சி மாற்றத்தை அடுத்து எது மோசமாக நடக்கலாம் என நடுநிலைப் பார்வையாளர்கள் பலரும் அச்சப்பட்டார்களோ அது நடக்க ஆரம்பித்திருப்பதாகத் தெரிகின்றது.

முன்னைய இருண்ட யுகத்தில் நீதித்துறை பந்தாடப்பட்டமை போன்ற நிலைமை மீண்டும் ஏற்படலாம் என்றுதான் நடுநிலைப் பார்வையாளர்கள் எல்லோரும் அச்சம் கொண்டிருந்தனர்.

நாட்டின் பிரதம நீதியரசரையே அச்சுறுத்திப் பதவியிலிருந்து விரட்டியடிக்கும் ஓர் இருண்ட யுகம் நாட்டில் இருந்தது.

2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலை அடுத்து அந்த இருள் ஓரளவுக்கு அகன்றது. 19ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் நீதித்துறை உட்பட நாட்டின் பல முக்கிய கட்டமைப்புகளின் சுயாதீனத் தன்மை ஓரளவுக்குப் பேணி உறுதிசெய்யப்பட்டது.

ஆனால் 2019 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலை அடுத்து மீண்டும் அந்த இருள் நீதித்துறையின் சுயாதீனத் தன்மையைச் சூழ்ந்து கவ்வத் தொடங்கி விட்டது போலத் தோன்றுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் மிக நெருக்கமான முன்னாள் இராணுவ அதிகாரியும், தற்போது சட்டத்தரணியாகத் தொழில்புரிவருமான அஜித் பிரசன்ன நேற்று ஊடகவியாலர் மாநாட்டில் பகிரங்கமாகத் தெரிவித்த கருத்துகள் இத்தகைய இருள் மீண்டும் இலங்கையின் நீதித்துறையைக் கவ்வத் தொடங்கி விட்டது என்பதற்கான கட்டியம்தான்.

கோட்டாபய ராஜபக்ஷவின் வலது கரமாக விளங்குபவர் அஜித் பிரசன்ன. கோட்டாபயவை ஜனாதிபதி வேட்பாளராக்கி, தேர்தல் சமரில் பெருவெற்றியீட்ட வைத்த காரணிகளில் ஒன்று அவரின் 'வியத்மக' அமைப்பு. அறிவுஜீவிகளின் அமைப்பு என்று தன்னை வெளிப்படுத்தும் கட்டமைப்பு அது. அந்த அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர்களுள் ஒருவர்தான் இந்த அஜித் பிரசன்ன.

சட்டத்தரணியான அவர் நேற்று பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையில் வைத்து ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கையின் நீதி, சட்டத்துறை குறித்து அதிரடிக் கருத்துக்களைப் பகிரங்கமாக வெளியிட்டிருக்கின்றார்.

பல நீதிவான்களும், வழக்குத் தொடுக்கும் சட்ட அதிகாரிகளும் அரசியல் அழுத்தத்துக்கு உட்பட்டு பக்கச் சார்பாகவும், நீதிமுறைக்கு மாறாகவும் செயற்படுகின்றார் என்று கூறிய அவர் பல நீதிவான்கள், அரச சட்டத்தரணிகள் போன்றோரின் பெயர்களையும் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

கொழும்பு நீதிவான் லங்கா ஜெயரட்ண, கொழும்பு கோட்டை நீதிவான்கள் ரங்க திஸநாயக்க, உதேஷ் ரணதுங்க, மவுண்ட்லவேனியா நீதிவான் லொஹான் அபேவிக்ரம ஆகியோர் அரசியல் அழுத்தங்களுக்கு உட்பட்டுப் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றார்கள் என அலரிமாளிகையில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் அவர் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

சில பதவிகளையும், பதவி உயர்வுகளையும், தமிழ் புலம்பெயர் சமூகத்திடமிருந்து நிதியையும் பெறுவதற்காகவே இந்த நீதித்துறை அதிகாரிகள் இவ்வாறு பக்கச் சார்பாக செயற்படுகின்றார்கள் என்று குற்றச்சாட்டு வெடிகுண்டைப் பகிரங்கமாக அவர் போட்டிருக்கின்றார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஜானக பண்டார, சிரேஷ்ட பிரதி சொலஸிட்டர் ஜெனரல் திலீபா பீரிஸ் ஆகியோர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துடன் சர்ந்து கபட நாடகம் ஆடி, சில குறிப்பிட்ட வழக்குகளில் சந்தேக நபர்களுக்கு நீதியாகக் கிடைக்க வேண்டிய பிணையைக் கூட மறுக்கச் செய்துள்ளனர் என்ற சாரப்படவும் அவர் பகிரங்கக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இருண்ட யுக காலத்தில் தென்னிலங்கைச் சிங்கள ஊடகவியலாளர்களான லஸந்த விக்கிரமதுங்க, கீத் நொயர், பிரகீத் எக்னெலிகொட போன்றோர் தொடர்பான விடயங்களில் குற்றம் இழைத்தோர் எனச் சந்தேகிக்கப்படும் படையினர் மற்றும் ஆள் கடத்தல், சித்திரவதை முகாம் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்ட படைத்தரப்பினர் தொடர்பான வழக்குகளை ஒட்டியே இவ்வாறு அவர் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

அவர் குறிப்பிடுகின்றமை போல சட்டத்துறைத் தவறுகள் இருக்குமாயின் அது நீதிச் சேவை ஆணைக்குழு ஊடாக முறைப்பாடு அளித்துக் கையாளப்பட வேண்டிய ஒன்றே தவிர, பகிரங்கமாக விமர்சிக்கப்பட உரிமையுள்ள விடயமே அல்ல.

இப்படி நீதிவான்களின் பெயர்களைக் குறிப்பிட்டு பகிரங்க விமர்சனம் செய்வது – அதுவும் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பகிரங்க செய்தியாளர் மாநாடு கூட்டி அச்சுறுத்துவது – நீதித்துறைக்கு விடுக்கப்பட்ட பயமுறுத்தல் சவால் மாத்திரம் அல்ல, நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையும் கூட.

இந்த விடயத்தில் முதல் கொதித்தெழுந்து நாட்டின் நீதித்துறையின் சுயாதீனத்தைக் காப்பாற்ற வேண்டியது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், நீதிமன்றங்கள் போன்றவற்றின் கட்டாயக் கடப்பாடும், தவிர்க்க முடியாத பொறுப்புமாகும்.

புதிய ஆட்சியின் கீழ், இலங்கை நீதித்துறையின் சுதந்திரத்துக்கும், சுயாதீனப் போக்குக்கும், தனித்துவத்துக்கும், பக்கச் சார்பற்ற செயற்பாட்டுக்கும் விழுந்த முதல் அடி இதுவாகும் .பார்ப்போம். இலங்கை நீதித்துறை இதற்கு எத்தகைய பிரதிபலிப்பைக் காட்டப் போகிறது? அடங்குமா? எகிறுமா? இருந்து பாரப்போமே...!

# காணி அபகரிப்புக்கு எதிராக மன்னார் மக்கள் போராட்டம்!





மன்னார், டிசெ. 13

காணி அபகரிப்புக்கு எதிராக மன்னார் மடுப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பூசாரியார் குளம் கிராம மக்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

பூசாரியார் குளம் கிராமத்தில் உள்ள மக்களுக்குச் சொந்தமான பெருந் தொகையான காணிகளை அயல் கிராமமான மதீனா நகர் கிராம மக்கள் அபகரித்து வந்த நிலையிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அந்தப் பகுதியில் இரு கிராம மக்களுக்கும் இடையில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இந்தப் போராட்டத்தின்போது வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், மற்றும் சிவமோகன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினர்.

பூசாரியார் குளம் கிராம மக்களுக்கு சொந்தமான சுமார் 150 இற்கும் அதிகமான ஏக்கர் காணியில் உள்ள காட்டு நிலப்பரப்புக்கு இவ்வாறு எல்லைக்கற்கள் போடப்பட்டுள்ளன.

சம்பவ இடத்திற்கு சென்ற மடு பிரதேச செயலாளர், அந்தப் பகுதியில் காணி தொடர்பாக மேற்கொண்டு வந்த அனைத்து நடவடிக்கைகளையும் இடை நிறுத்தினார்.

தொடர்ந்து மடுப் பொலிஸார் மற்றும் வன வளத் திணைக்கள அதிகாரிகளும் அந்தப் பகுதிக்குச் சென்று காடுகள் அழிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

# வவுனியா பிரதேச சபையின் பட்ஜெட் தோல்வியடைந்தது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வசம் உள்ள வவுனியா வடக்குப் பிரதேச சபையின் 2020 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் பெரும்பான்மை வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது.

வவுனியா வடக்கு பிரதே சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் இ.தணிகாசலம் தலைமயில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது, சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முண்ணணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன, சுயேச்சைச் குழு ஆகியவற்றைச் சேர்ந்த 25 உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகி இருந்தனர். மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் ஒருவர் சமூகமளித்திருக்கவில்லை.

இந்த அமர்வில் வரவு – செலவுத்திட்ட விவாதம் இடம்பெற்று வாதப் பிரதிவாதங்கள் கடுமையாக இடம்பெற்றன.

கடந்த 2019 ஆம் ஆண்டுக்கான சபையின் வரவு – செலவுத் திட்டத்தில் தவிசாளர் தனது பகுதிக்கே முக்கியத்துவம் வழங்கியதுடன் இம்முறை வரவு – செலவுத் திட்டத்திலும் மக்கள் சார்பான வேலைத் திட்டத்திற்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை என உறுப்பினர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

அநேக உறுப்பினர்களின் எதிர்ப்பினால் வரவு – செலவுத் திட்டம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது. இதன்பொது வரவு – செலவுத் திட்டத்துக்கு எதிராகத் தமிழர் விடுதலைக் கூட்டணி, பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சுயேச்சைக் குழு ஆகியவற்றைச் சேர்ந்த 17 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 7பேர் வாக்களித்ததுடன், கூட்டமைப்பின் பங்காளையான ரெலோவைச் சேர்ந்த சபையின் உபதவிசாளர் யோகராசா நடுநிலை வகித்திருந்தார். இதனால் சபையின் பட்ஜெட் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தது. (ஐ)

# வவுனியா பிரதேச செயலர் உதயராசா மாவட்ட செயலகத்துக்கு இடமாற்றம்

வவுனியா, டிசெ. 14

வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசாவை வவுனியா மாவட்ட செயலகத்துக்கு இடமாற்றும் கடிதம் அனுப்பபட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் ஐ. எம். ஹனீபா தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலாளரை மாவட்ட செயலகத்திற்கு மாற்றுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அது தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

வவுனியா பிரதேச செயலாளரை மாவட்ட செயலகத்திற்கு இடமாற்றம் செய்யுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் எமக்கு தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் வகையிலான கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர் மாவட்ட செயலகத்துக்கு இணைப்புச் செய்யப்படுவார் என அரச அதிபர் தெரிவித்தார். (ஐ)

# நான்காவது நாளாக நேற்றும் சி.ஐ.டியில் முன்னிலையான சுவிஸ் தூதரக ஊழியர்

கொழும்பு, டிசெ. 14

கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் சுவிஸ் தூதரகப் பணியாளர் கானியா பெனிஸ்டர் நேற்று நான்காவது தடவையாக சி.ஐ.டியில் முன்னிலையானார்.

நேற்று முன் தினம் நடந்த வழக்கு விசாரணையின்போது, சுவிஸ் தூதரின் இல்லத்தில் வாக்குமூலம் பெற சி.ஐ.டிக்கு உத்தரவிடும்படி கானியாவின் சட்டத்தரணிகள் விடுத்த வேண்டுகோளை நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

தகுதிவாய்ந்த மனநல வைத்தியர் குழுவின் முன்பாகக் கானியாவை முன்னிலைப்படுத்தவும் நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னதாக அனைத்து விசாரணைகளும் பூர்த்தியாகுமென சி.ஐ.டி தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தூதரகப் பணியாளர் நேற்றும் சி.ஐ.டியில் முன்னிலையானார். (ஐ)

## நாளை

15.12.2019 – ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம்: புநர்பூசம் கா. 6.49 வரை
திதி : திருதியை மு.ப 8.54 வரை
இராகுகாலம் : 4.51 – 6.21
சுப நேரம் : 9.21 – 10.51

# கடற்றொழில் அபிவிருத்திக்கு நோர்வே அரசு உதவவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



கொழும்பு, டிசெ. 14

மீன்பிடித்துறையை விருத்திசெய்வதற்கான அதிகளவான முதலீடுகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் வரவேற்பதாகவும், குறிப்பாகக் கடற்றொழில்சார் செயற்பாடுகளில் பின்தங்கியிருக்கும் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களின் அபிவிருத்திக்கு பாரிய திட்டங்களை எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நோர்வே அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்

கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்த நோர்வே தூதுவர் றைனா ஜொனான்லி எஸ்கெல் தலைமையிலான குழுவினரிடம் அமைச்சரினால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில், நாடளாவிய ரீதியில் கடற்றொழில் சார் அபிவிருத்திக்கு நோர்வே மேற்கொண்டு வருகின்ற வேலைத்திட்டங்களுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் அவை மேலும் அதிகரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த நோர்வே தூதுவர், இலங்கையில் படகு கட்டும் தொழில்துறையிலும் அதேபோன்று நன்னீர் மற்றும் குளம், களப்பு போன்ற நீர்நிலைகளில் கடல் உற்பத்திகளை அதிகரிப்பது தொடர்பாக நோர்வே ஆர்வம் செலுத்தி வருவதாகத் தெரிவித்ததுடன், இந்தத் திட்டம் வெற்றியடையும் பட்சத்தில் தனியார் முதலீட்டாளர்களை அழைத்து வருவதற்கும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், ஏற்கெனவே வேலைத்திட்டம் ஒன்றை காரைநகர்ப் பகுதியில் ஆரம்பிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும், முதற்கட்டமாகப் பிடிக்கப்படுகின்ற மீன்கள் பழுதடையாமல் பாதுகாக்கும் வகையிலான தொழில்நுட்பம் உள்ளடக்கப்பட்ட மீன்பிடிப் படகுகள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஏற்கெனவே தொழில் சார் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ள நிலையில், வடக்கு கடல்களில் பரீட்சார்த்த முயற்சியாக முதற்கட்டமாக 10 படகுகளை வழங்கவுள்ளதாகவும் தூதுவர் கூறினார்.

இந்த முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் அந்தப் படகுகளை ஏற்றுமதி செய்யும் திட்டங்களும் இருப்பதனால் நூற்றுக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்த முடியும் என நம்புவதாகவும் மேலும் தூதுவர் தெரிவித்தார்.

நோர்வே அரசின் இந்தத் திட்டத்தை வரவேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தத் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்குமாறும் அதற்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். (ஐ)

## கொழும்பு மாநகர சபை பட்ஜெட் நிறைவேற்றம்

கொழும்பு, டிசெ. 13

கொழும்பு மாநகர சபையின் 2020ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் 65 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபையின் 2020ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பு நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 78 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதற்கமைய 65 மேலதிக வாக்குகளால் அது நிறைவேற்றப்பட்டது. (ஐ)

## தேர்தலை மையப்படுத்தி 50 நாள் வேலைத்திட்டம்

### ஆரம்பிக்கவுள்ளது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ. 13

பொதுத் தேர்தலை மையப்படுத்தி 50 நாள் வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலை மையமாகக் கொண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி முதல் 50 நாள் வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ள தயாராகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது ஜனாதிபதித் தேர்தலில் வீழ்ச்சியடைந்த வாக்குகளை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் பிமல் ரத்னாயக்க கூறினார்.

இதேவேளை, நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலின் போது அமைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தி என்ற அமைப்பின் ஊடாகவே பொதுத்தேர்தலிலும் களமிறங்கவுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி அண்மையில் அறிவித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கிளிநொச்சி பண்பாட்டு விழா நேற்று சிறப்பாக இடம்பெற்றது






கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு விழா சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இந்த விழா இராஜாங்க அமைச்சின் செயலாளராக புதிதாக பொறுப்பேற்றுள்ள சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக திறண் விருத்தி மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது, பாரம்பரிய பண்பாட்டை எடுத்தியம்பும் வகையில் ஆரம்பமான பண்பாட்டுப் பேரணி பிள்ளையார் ஆலயம் முன்பாக ஆரம்பமாகி விழா மண்டபம் வரை முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து மங்கள விளக்கேற்றலுடன் குறித்த விழா ஆரம்பமாகியதுடன், பண்பாட்டு விழுமியங்களை எடுத்தியம்பும் கலை நிகழ்வுகளும் அரங்கை அலங்கரித்தன.

அத்துடன், இளம் கலைஞர்கள் கலைத்துறை சாதனையாளர்கள் உள்ளிட்டோருக்கான விருதுகளும் பரிசில்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இளங்கோவன், வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், துறைசார் அதிகாரிகள், கலைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதியைச் சந்தித்து வாழ்த்திய ஆப்கன் தூதர்

கொழும்பு, டிசெ. 14

இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் எம். அஷ்ரப் ஹைதருக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆப்கானிஸ்தான் அரசின் சார்பில் ஆப்கானிஸ்தான் தூதுவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அத்துடன், இரு நாடுகளுக்கிடையிலான உறவை மேம்படுத்துவது குறித்தும் இதில் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
Western Union WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயனைப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com

## சில் வண்டு சிக்கியது..!

# ஆபாச படவிவகாரத்தில் திருச்சியில் முதல் கைது!



குழந்தைகள் ஆபாச படத்தை முகநூலில் பதிவேற்றம் செய்து வந்த திருச்சி இளைஞர் அதிரடியாக கைது செய்யப்பட்டு உள்ளார்.

குழந்தைகளின் ஆபாசப் படங்களை இணையத்தில் பதிவேற்றம் செய்வது, அதனை சமூக வலைதளங்களில் பரப்புவது, செல்போன் மூலம் பகிர்வது தண்டனைக்குரிய குற்றம் என்று தமிழக கூடுதல் டி.ஜி.பி. ரவி எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதனைக் கேலி செய்யும் விதமாக சிலர் சமூக வலைதளங்களில் 'சிறுத்தை சிக்கும்; சில் வண்டு சிக்காது' - என்றெல்லாம் பொலிஸாரை விமர்சித்தனர்.

இந்த நிலையில் குழந்தைகள் ஆபாசப் படங்களை முக நூலில் பதிவேற்றம் செய்தவர்கள், அதனைப் பகிர்ந்தவர்களின் விவரம் ஒவ்வொரு மாவட்டக் காவல் துறைக்கும் தெரிவிக்கப்பட்டது. இதில் முதல் சில்வி வண்டு பொலிஸ் பிடியில் சிக்கி உள்ளது.

முக நூலில் 'நிலவன் நிலவன்', 'ஆதவன் ஆதவன்' ஆகிய போலிக் கணக்குகளில் இயங்கிய திருச்சி பாலக்கரை காஜாபேட்டை புது தெருவைச் சேர்ந்த கிரிஸ்டோபர் அல்போன்ஸ் என்கிற 42 வயது நபர்தான் அவன்.

நேற்று அதிகாலை 5 மணிக்கு கிறிஸ்டோபர் அல்போன்ஸ் வீட்டின் கதவை தட்டிய காவல்துறையினர் அவனை அலேக்காக தூக்கி வந்தனர். ஆபாச படங்களை பதிவேற்றம் செய்வதற்கும் அதனை சுமார் 15 நபர்களுக்கு பகிர்வதற்காகவும், அவன் பயன்படுத்திய ஸ்மார்ட் போனும் பறிமுதல் செய்யப்பட்டது.

காவல்துறையினர் வருவதற்கு முன்பே செல்போனில் வைத்திருந்த ஆபாச படங்களை எல்லாம் கிறிஸ்டோபர் அழித்துள்ளான்.ஆனால் அந்த ஆபாச படங்களை அனுப்ப பயன்படுத்திய பேஸ்புக் மெசேஜர் அப், கிறிஸ்டோபரை வசமாக சிக்க வைத்துள்ளது. இதனை தொடர்ந்து கிறிஸ்டோபர் அல்போன்ஸ் மீது போக்சோ உள்ளிட்ட 7 சட்ட பிரிவுகளின் கீழ் வழக்கு பதிந்த திருச்சி அனைத்து மகளிர் காவல் துறையினர் அவனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 15 நாட்கள் சிறையில் அடைத்தனர்.

கிறிஸ்டோபர் அல்போன்ஸ், ஐ.டி.ஐ. மெக்கானிக்கல் படிப்பை முடித்தும், வயது 42ஐக் கடந்த நிலையில் , உருப்படியான வேலைக்கு செல்லாமல் ஆபாச படத்திற்கு அடிமையாகிச் சுற்றித் திரிந்தமையால், நீண்ட காலமாக திருமணத்திற்குப் பெண் கிடைக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

தனிமையில் தவித்த சில் வண்டு கிறிஸ்டோபர் அல்போன்சுக்கு கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்புதான் பெற்றோர் திருமணம் செய்து வைத்துள்ளனர்.

இதுவரை கிறிஸ்டோபர் அல்போன்ஸுக்குக் குழந்தை பாக்கியம் இல்லாத நிலையில் நாகர்கோவிலில் தங்கி வீட்டு வேலை செய்து வந்த சூழலில் தற்போது குழந்தைகள் ஆபாச பட வழக்கில் சிக்கியுள்ளான் கிரிஸ்டோபர்.

குழந்தைகளின் ஆபாச படங்களை பார்ப்பதும், அதனைப் பகிர்வதும், மன நோய் என சுட்டிக்காட்டும் காவல் துறையினர், செல்போன் மற்றும் சமூக வலைதளங்களை இது போன்ற விபரீத செயல்களுக்கு பயன்படுத்துவோர் அடுத்தடுத்து ஸ்மார்ட் போனைப் பொலிஸிடம் பறிகொடுத்துவிட்டு ஜெயிலுக்கு செல்லும் நிலை ஏற்படும் என்றும் எச்சரித்துள்ளனர்.

சேட்டை செய்யும் சிறுத்தை மட்டுமல்ல, சில்மிஷம் செய்யும் சில்வண்டுகளும் இனி காவல் துறையிடம் ஒவ்வொன்றாகச் சிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## பேரறிவாளனுக்குப் பரோல் மேலும் 30 நாள்கள் நீடிப்பு




முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று, சிறையில் இருந்த பேரறிவாளனுக்கு மேலும் 30 நாள்கள் பரோல் நீட்டிக்கப்பட்டுள்ளது.

உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ள அவரது தந்தையைக் கவனித்துக் கொள்வதற்காக அவருக்கு ஒரு மாதம் பரோல் வழங்கப்பட்டு இருந்தது.

நேற்றுடன் ஒரு மாதம் நிறைவடைந்த நிலையில், மேலும் ஒரு மாதம் பரோலை நீடிக்க வேண்டும் என்று தமிழக அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டு இருந்தது.

அதனை ஏற்று பேறறிவாளனுக்கு மேலும் ஒரு மாதம் பரோலை நீடித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

எந்த விதமான கூட்டத்திலும், நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ள கூடாது, ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்க கூடாது என்பனபோன்ற நிபந்தனைகளும் அவருக்கு விதிக்கப்பட்டுள்ளன.

## சென்னையில் போராட்டம்; உதயநிதி ஸ்டாலின் கைது





இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதிஸ்டாலின்கைதுசெய்யப்பட்டார்.

சில அயல்நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் அல்லாத அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வகை செய்யும் குடியுரிமை திருத்தச் சட்டம் எதிர்க் கட்சிகளின் பலத்த எதிர்ப்புக்கு இடையே நாடாளுமன்றின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தைக் கண்டித்து அசாம், திரிபுரா உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் மாணவர்கள், பொதுமக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

நாடு முழுவதும் எதிர்க்கட்சிகள் போராட்டத்தை நடத்தி வருகின்றன. சென்னையில் தி.மு.க. சார்பில் இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் சென்னை சைதாப்பேட்டையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அப்போது தி.மு.கவினர் மத்திய அரசை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்பினர். குடியுரிமை திருத்தச் சட்ட நகலைக் கிழித்து எரிந்தனர்.

இதைத் தொடர்ந்து பொலிஸார் உதயநிதி ஸ்டாலினையும் தி.மு.க. நிர்வாகிகளையும் கைது செய்தனர்.

## இந்தியக் குடியுரிமை திருத்தச் சட்டத்தை கடுமையாக எதிர்க்கின்றார் பாக். பிரதமர்



இஸ்லாமாபாத்,டிசெ.14

இந்திய நாடாளுமன்றத்தில் குடியுரிமை திருத்தச் சட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்து நிறைவேற்றி இருப்பதற்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இதையொட்டி நேற்று அவர் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், மோடி தலைமையின் கீழ் இந்தியா, இந்து மேலாதிக்க செயல்திட்டத்துடன் முறையாக நகர்ந்து கொண்டிருக்கிறது எனக்கூறி உள்ளார்.

மற்றொரு பதிவில், இந்த செயல் திட்டமானது, பாகிஸ்தான் மீதான அணு ஆயுத மிரட்டல்களுடன் சேர்ந்து, மிகப்பெரிய ரத்த களரிக்கு வழிநடத்தும். உலகுக்கு நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும். காலம் கடந்து செல்வதற்கு முன் உலகம் இதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்

# வட கிழக்கு மாநிலங்களில் பதற்றம்!

ஷில்லாங்,டிசெ.14

இந்தியாவில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக வடகிழக்கு மாநிலங்களில் போராட்டம் தீவிரம் பெற்று வருகிறது.

மத்தியில் பாரதீய ஜனதா கூட்டணி அரசு நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் குடியுரிமை திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. கடும் எதிர்ப்புகளை மீறி அந்தச் சட்டம் நிறைவேறியது.

இந்தப் புதிய சட்டம் அசாம் உள்ளிட்ட வட கிழக்கு மாநிலங்களில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. கடந்த 10 ஆம் திகதி முதல் பெரும் போராட்டங்களுக்கு வழி வகுத்துள்ளது.பாகிஸ்தான், வங்காள தேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வெளியேறி, இந்தியாவில் 2014 ஆம் ஆண்டு வரை தஞ்சம் புகுந்த முஸ்லிம் அல்லாத பிற மத சிறுபான்மையினருக்கு குடியுரிமை வழங்க வகை செய்தால், அது பூர்வ குடிமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று இந்த



மாநிலங்களில் உள்ளோர் கருதுகிறார்கள்.

அசாம் மாநிலத்தில் போராட்டம் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. கவுகாத்தி நகரில் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால் மக்கள் அதை மீறி நேற்றும் போராட்டங்களைத் தொடர்ந்தனர். மாநிலம் முழுவதும் பள்ளி, கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளன. கவுகாத்தியில் பல இடங்களில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். வியாழனன்று நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் மட்டும் 3 பேர் பலியாகினர் எனத் தகவல் வெளியாகி உள்ளது

லக்கிம்பூர், டின்சுகியா, திப்ருகார் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் இணையதள சேவை முடக்கப்பட்டுள்ளது. அங்கு அடுத்த 48 மணி நேரத்துக்கு இணையதள சேவை முடக்கம் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஏராளமான விமான சேவைகள், ரெயில் சேவைகள் ரத்தாகின. கவுகாத்தி, டின்சுகியா, ஜோர்ஹாட், திப்ருகார் உள்ளிட்ட இடங்களில் இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

# பிரிட்டனில் பிரதமர் போரிஸ் ஜோன்சனின் கொன்சர்வேட்டிவ் கட்சிக்குப் பெருவெற்றி

## தனித்து ஆட்சி அமைக்க அறுதிப் பெரும்பான்மையும் கிட்டியது

லண்டன்,டிசெ.14

பிரிட்டனில் நேற்று முன்தினம் (டிசம்பர் 12) நடைபெற்ற பொதுத் தேர்தலில்நேற்றுப் பகல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ள 648 இடங்களில், 363 இடங்களில் ஆளும் கொன்சர்வேடிவ் கட்சியும், 203 இடங்களில் தொழிலாளர் கட்சியும், ஸ்கொட்டிஷ் தேசிய கட்சி 48 இடங்களிலும், தாராளவாத ஜனநாயகவாதிகள் அமைப்பு 11 இடங்களிலும், ஜனநாயக ஐக்கியத்துவக் கட்சி 8 இடங்களிலும் பிற கட்சிகள் 15 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன வென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1987ஆம் ஆண்டிற்கு பிறகு கொன்சர்வேடிவ் கட்சி பெறும் மிகப் பெரிய வெற்றியாக இது பார்க்கப்படுகிறது.

அதேபோல் 1935ஆம் ஆண்டிற்கு பிறகு தொழிலாளர் கட்சி பெறும் மோசமான தோல்வியாக இது.

இந்நிலையில் அடுத்த பொதுத் தேர்தலில் தனது கட்சியை வழி நடத்தப் போவதில்லை என தொழிலாளர் கட்சியின் தலைவர் ஜெர்மி கோபைன் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் அவர் தனது கட்சித் தலைமை பொறுப்பிலிருந்து விலகுவது குறித்து எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை.

தங்கள் கட்சியின் தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள முக்கிய வியங்கள் பிரெக்ஸிட் பிரச்சினையால் மழுங்கடிக்கப்பட்டுவிட்டன என அவர் தெரிவித்துள்ளார்.




உறுப்பினர்களில் பெரும்பாலானோர் ஜெர்மி கோபைனின் தலைமை மீது குற்றம் சுமத்தியுள்ளனர்.

வந்து கொண்டிருக்கும் தேர்தல் முடிவுகளின்படி, தொழிலாளர் கட்சியின் வலுவான பகுதிகளாக கருதப்படும் வடக்கு இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் ஆகியவற்றில் தொழிலாளர் கட்சி தோல்வியைச் சந்தித்துள்ளது.

இந்த பகுதிகள் 2016ஆம் ஆண்டு பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்று வாக்களித்த பகுதிகள்.

இது பிரமர் போரிஸ் ஜோன்சனுக்கு ஒரு மிகப்பெரிய வெற்றியாக தெரிகிறது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல் ஒரு வரலாற்று தேர்தல் என்று குறிப்பிட்டுள்ள போரிஸ் ஜோன்சன், பிரெக்ஸிட்டை நிறைவேற்றுவதற்கு ஒரு புதிய ஆதரவை இந்தத் தேர்தல் கொடுத்துள்ளது, என்று தெரிவித்தார்.

தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகளின்படி பார்த்தால் தொழிலாளர் கட்சியின் வாக்கு சதவீதம் 9 சதவீதம் வரை குறைந்துள்ளது.

முன்னதாக ஆளும் கொன்சர்வேடிவ் கட்சி பெரும்பான்மை இடங்களைப் பிடிக்கும் என தேர்தலுக்கு பிந்தைய கருத்து கணிப்புகள் தெரிவித்தன.

பிபிசி, ஐடிவி மற்றும் ஸ்கை நியூஸ் சேனலால் நடத்தப்பட்ட தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பில், கொன்சர்வேடிவ் கட்சி பெருன்பான்மையைக் காட்டிலும் 86 இடங்கள் கூடுதலாக வெற்றி பெறும் என்று தெரியவந்தது.

பிரிட்டனின் வாக்குச் சாவடிகளில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகளில், 2017ஆம் ஆண்டு தேர்தலை காட்டிலும் அதிகமாக வெற்றி பெற்று கொன்சர்வேடிவ் கட்சி 368 எம்பிக்களை பெறும் என்று கூறப்பட்டுள்ளது.

தொழிலாளர் கட்சி 191 இடங்களையும், தாராளவாத ஜனநாயகவாதிகள் கட்சி 13 இடங்களையும், ஸ்கொட்டிஷ் தேசியக் கட்சி 55 இடங்களையும் கைப்பற்றும் என்றும் பிரெக்ஸிட் கட்சி எந்த இடத்தையும் கைப்பற்றாது எனும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொன்சர்வேடிவ் கட்சி வெற்றி பெற்றால், போரிஸ் ஜோன்சன் மீண்டும் பிரதமராகின்றார்.

## பாக். உடனான பாதுகாப்பு விவகாரங்கள் பகிரங்கமாகப் பகிர அமெரிக்கா மறுப்பு



பாகிஸ்தானுடனான பாதுகாப்பு விவகாரங்களைப் பகிரங்கமாகப் பகிர முடியாது என அமெரிக்கா மறுப்புத் தெரிவித்திருப்பதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் எவ்.16 ரகப் போர் விமானங்களைத் தவறாகப் பயன்படுத்துவதாக இந்தியா அளித்த முறைப்பாட்டையடுத்து, அமெரிக்கா பாகிஸ்தானிடம் விசாரணை மேற்கொண்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்க ஆயுதக் கட்டுப்பாட்டு துறையும் வெளி யுறவு பாதுகாப்புத் துறையும் எவ்.16 விமானத்தைத் தவறாக பயன்படுத்தியமை குறித்து விளக்கம் கேட்டுப் பாகிஸ்தானுக்கு கடிதம் எழுதியிருப்பதாக அமெரிக்க ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது. ஆனால் இருநாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு, தொழில்நுட்பம் போன்ற விவகாரங்களைப் பகிரங்க மாக வெளியிட முடியாது என அமெரிக்கா தெரிவித் துள்ளது.

பாகிஸ்தான் போர் விமானங்கள் இந்தியாவில் ஊடுருவியமையை அடுத்து அவற்றை இந்திய விமானப்படையினர் விரட்டியடித்தனர். அப்போது தமிழக விங் கொமாண்டர் அபிநந்தன் பாகிஸ்தான் ஏவிய அமெரிக்கத் தயாரிப்பான எவ்.16 விமானத்தைச் சுட்டு வீழ்த்தினார்.

## கனடாவில் சிறிய விமானம் விழுந்து நொறுங்கிய விபத்தில் மூவர் மரணம்



ஒட்டாவா,டிசெ.14

கனடாவில் விமானம் விழுந்து நொறுங்கிய விபத்தில் 3 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணம் பெர்ஸ்னோ நகரில் இருந்து கனடாவின் பிரிட்டிஷ்கொலம்பியா மாகாணத்துக்கு சிறிய ரக விமானம் ஒன்று புறப்பட்டு சென்றது. விமானத்தில் விமானி உட்பட 3 பேர் இருந்தனர்.

இந்த விமானம் கனடாவில் உள்ள கேப்ரியோலா தீவுக்குஅருகே பறந்துகொண்டிருந்தபோது திடீரென தரையில் விழுந்து நொறுங்கியது. இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 3 பேரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக கனடா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## டேர்பன் கடற்கரையில் தொன் கணக்கில் மிதந்த பிளாஸ்டிக் கழிவுகள்



தென்னாபிரிக்காவிலுள்ள டேர்பன் கடற்கரையில், தொன் கணக்கிலான பிளாஸ்டிக் கழிவுகள் அலையில் மிதந்துவந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரல் ஆகி வருகிறது.

பிளாஸ்டிக் குப்பைகளை மக்கள் முறையாகக் குப்பைத் தொட்டிகளில் போடாதமையால், அவை மழை நீரில் அடித்துவரப்பட்டு கடலில் கலந்து மிதக்கின்றன. சீறி எழும்பி வரும் அலைகளில் பிளாஸ்டிக் போத்தல்கள் முண்டியடிப்பதுபோன்ற காட்சி, பிளாஸ்டிக் பயன்பாட்டின் அபாயத்தையும் விவரிக்கும் விதமாக அமைந்துள்ளது.

பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்து, குப்பைக் கழிவு மேலாண்மையில் தென்னாபிரிக்க அரசு கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வங்கத்தில் பிளாஸ்டிக் தொழிற்சாலையில் திடீரென ஏற்பட்ட தீவிபத்தில் 13 பேர் பலி



டாக்கா,டிசெ.14

வங்காளதேசத்தில் பிளாஸ்டிக் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீவிபத்தில் 13 பேர் பலியாகினர்.

வங்காளதேச தலைநகர் டாக்காவிற்கு அருகே உள்ள கெரானிகன்ச் நகரத்தில் உள்ள ஒரு பிளாஸ்டிக் தொழிற்சாலையில் நேற்று முன்தினம் மதியம் எதிர்பாராத விதமாக இந்த விபத்து ஏற்பட்டது.

இதனையடுத்துத் தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சுமார் 3 மணி நேரப் போராட்டத்திற்குப் பிறகு தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்கள் உடனடியாக டாக்கா மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் 13 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். மேலும் 21 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தீவிபத்து ஏற்பட்டதற்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். உரிய அனுமதி இன்றி அந்தத் தொழிற்சாலை இயங்கி வந்ததாக அந்நாட்டின் உள்ளூர் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்பாக கடந்த பெப்ரவரி மாதம் இந்த ஆலையில் தீவிபத்து ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கோட்டாவுக்கு ஒரு மடல்

**பிரான்ஸ் நாட்டின் மனித உரிமைகள் செயற்பாட்டு மையத்தின் இயக்குநரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமாகிய ச.வி. கிருபாகரன் இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எழுதியுள்ள பகிரங்க மடலின் முதல் பகுதி நேற்றுப் பிரசுரமாகியிருந்தது. அவரின் பகிரங்க மடலின் எஞ்சிய பகுதி இன்று இங்கு பிரசுரமாகின்றது.**

**(நேற்றைய மிகுதி)**

நீங்கள் ஜனதிபதியாக சத்திய பிரமாணம் எடுத்தவுடன் ஆற்றிய ஆரம்ப உரையில், நான் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, எனது நிறைவேற்று அதிகாரத்தை நாட்டின் நலனுக்காக பயன்படுத்த ஒரு பொழுதும் தயங்க மாட்டேன் என்று கூறியமை உங்கள் மொழியில் நீங்கள் கூறும் சிறுபான்மையினருக்கான அச்சுறுத்தல் என்பதை முழு உலகமுமே அறியும்.

உங்களிடம் வெளிப்படையான எனது கேள்வி என்னவெனில், ஸ்ரீலங்காவில் அபிவிருத்தி முக்கியமானது என்பதை நீங்கள் எப்போது நினைத்தீர்கள்? நீங்கள் உண்மையில் உங்கள் நாடான ஸ்ரீலங்காவிற்கும், பௌத்த மதத்திற்கான தேச பக்தர் என எண்ணியிருந்தால், நீங்கள் ஏன் இலங்கையை விட்டு ஓடி அமெரிக்கக் குடியுரிமையை பெற்றுக் கொண்டீர்கள்? உங்கள் சகோதரர் மஹிந்த, நான்காவது முறையாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாதமையால், நீங்கள் இன்று ஜனாதிபதியாகியுள்ளீர்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

இப்பொழுது நீங்கள் கூறும் ஆசிய பிராந்தியத்தில் உங்கள் நடுநிலைமை என்பது உண்மையானது அல்ல. இந்தியா மற்றும் அமெரிக்காவை முட்டாளாக்குவதற்காக, இச் சிந்தனை மிகவும் தாமதமாக உங்களிற்கு வந்துள்ளது. ஒருவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், சீனா ஏற்கனவே இலங்கையில் ஒரு நிரந்தரத் தளத்தை அமைத்துள்ளது.

இது, உங்கள் சகோதரரின் ஆட்சி காலத்தில், மற்றும் நீங்கள் பாதுகாப்பு செயலாளராக இருந்துள்ள காலத்தில் செய்யப்பட்டவை. இப்பொழுது யாரோ ஒரு புத்திசாலியின் ஆலோசனையில் பிராந்தியத்தில் நடுநிலைமை பராமரிக்கப்படும் என்று போலியாக கூறி, இந்தியாவையும் அமெரிக்காவையும் மகிழ்விப்பதற்காக முதலைக் கண்ணீரைச் சிந்த ஆரம்பித்துள்ளீர்கள்.

நீங்கள் ஜனாதிபதியாகக் கடமை ஏற்றமை முதல் கச்சதீவை சீனாவிற்கு தாரை வார்த்து கொடுக்க நடைபெறும் இரகசியப் பேச்சுகள், ஒப்பந்தங்களின் முயற்சிகளை வல்லரசுகளின் புலனாய்வுகள் அறிந்துள்ளன. அத்துடன் மேலும் நானூறு ஏக்கர் காணியை தெற்கில் சீனாவிற்கு வழங்க இருப்பதையும் யாவரும் அறிவார்கள்.

ஸ்ரீலங்காவிற்கு 1976ஆம் ஆண்டு கச்சதீவை வழங்கியதையிட்டு, இந்தியா தற்பொழுது மிகவும் கடுமையாக கவலைப்படுவதை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்களென நம்புகிறேன். அம்பாந்தோட்டை துறைமுகத்தை, மற்றைய அரசாங்கத்திடமிருந்து, சீனா தொண்ணூற்றொன்பது ஆண்டுகள் குத்தகைக்கு எடுக்கப்படுவதற்கு முன்பு, சீனாஉங்களுடன் மற்றும் உங்கள் சகோதரர் மஹிந்தவுடனும் ஆலோசனை நடத்தியுள்ளது.

நீங்கள் இருவரும் ஆட்சியில் இல்லாதபொழுது, சீனாவுக்குப் பல தடவைகள்ப்பயணங்களைச் செய்துள்ளீர்கள் என்பதை நீங்கள் மறுக்க முடியாது. இந்தியாவில் இந்திய காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபொழுது, யுத்தம் முடிவடைந்தவுடன், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுவதாக மட்டுமல்லாமல், பதின்மூன்று பிளஸையும் செயல்படுத்துவார் என்ற போலி வாக்குறுதியுடன் உங்கள் சகோதரர் இந்தியாவின் உதவியை நாடினார்.

போர் முடிந்த உடனேயே, உங்கள் சகோதரர் இந்தியாவிற்கு அளித்த தனது வாக்குறுதிகளிருந்து நழுவியுள்ளார். துரதிர்ஷ்டவசமாக, மன்மோகன் சிங் மற்றும் சோனியா காந்தி ஆகியோர் உங்கள் சகோதரருக்கு அழுத்தம் கொடுக்க முடியவில்லை. ஏனெனில் நீங்கள் இருவரும், நடைபெற்று முடிந்த போரில் இந்தியாவின் பங்கு பற்றி கூறுவோமென கூறி இந்தியாவை மிரட்டினீர்கள்.

பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்ததும், உங்கள் சகோதரர், மோடியிடம் 13 ஆவது திருத்தத்தை முழுமையாகச் செயல்படுத்துவார் என்று மற்றொரு போலி வாக்குறுதியை அளித்தார். இந்தக் காலகட்டத்தில், உங்கள் சகோதரரின் அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்துள்ளதுடன் அவரும் நிறைவேற்று அதிகாரத்தை கொண்டிருந்தார். ஆனால் இவரினால் வடக்கு மற்றும் கிழக்கு வாழ்மக்களின் அரசியல் அபிலாஷைகள் எதையும் நிறைவேற். முடியவில்லை.

2010 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களிக்காத வடக்கு மற்றும் கிழக்கு மக்களை இவர் பழிவாங்கினார் என்பதே உண்மை. இப்பொழுது நீங்களும் அதேபாணியில்தான் பயணிக்கிறீர்கள்!

உங்கள் சகோதரரின் காலத்தின் பின்னர், நல்லாட்சி என்று அழைக்கப்படும் பேய்காட்டு ஆட்சி பதவிக்கு வந்தது. அதில் உங்கள் நல்ல நண்பர்கள் மற்றும் மங்கள சமரவீர போன்ற பேய்காட்டு வீரர்கள் உங்கள் சகோதரரின் பாதையை மென்மையான குரலுடன் பின்பற்றினர்.

வெளிப்படையாகச் சொல்வதானால்,பெயர் மற்றும் புகழுக்காகப் பெரிதாக ஆசைப்படும் சில அனுபவமற்ற புலம் அல்ல புலன் பெயர்ந்த தமிழர்கள், இந்த பேய்காட்டு ஆட்சி வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மக்களின் அரசியல் குறைகளைத் தீர்க்கப் போகிறது என்று உறுதியாக நம்பினர்கள்.



மங்கள சமரவீர இவர்கள்சிலரின்பிறந்த நாள்களிற்கு வாழ்த்து சொல்வதுடன், அவர்களுடன் விருந்துகளை நடத்தி இவர்களை மடையர்கள்ஆக்கினார். நீங்களும் இவர்களிற்கு இவற்றை செய்வீர்களானால், இப்புலன் பெயர்ந்த தமிழர்கள், உங்கள் சார்பாக பல அறிக்கைகளை வெளியிடுவார்கள்.

நீங்கள் ஜனதிபதியாகச்சத்தியபிரமாணம் எடுத்தவுடன் ஆற்றிய ஆரம்பஉரையில்,நான் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, எனதுநிறைவேற்றுஅதிகாரத்தைநாட்டின் நலனுக்காக பயன்படுத்த ஒருபொழுதும் தயங்க மாட்டேனெனக் கூறியுள்ளீர்கள்.

எது எப்படியானாலும், எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் உங்களிற்கு இரண்டில் மூன்று பெரும்பான்மையை பெறும் வரை, நீங்கள் மிகவும் கவனமாக செயல்படுவீர்கள் என்பது யாவரும் அறிந்த உண்மை. தற்பொழுது சிறைச்சாலையில் உள்ள போர் குற்றவாளிகள், ஊழலில் ஈடுபட்ட பாதுகாப்பு வீரர்கள் மற்றும் துணை இராணுவ ஒட்டு குழு உறுப்பினர்களை விடுவிக்க மட்டுமே நீங்கள் உங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துவீர்கள்.

நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் இது வேறு கதையாக இருக்கும். முன்னைய அரசாங்கத்தால் பலர் அரசியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று நீங்கள் கூறுகிறீர்கள். உங்கள் அரசியல் நோக்கம் கொண்ட செயல்பாடுகளைப் பார்ப்பதற்கு அனைவரும் காத்திருக்கிறார்கள்.

நீங்கள் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்ற பின்னர், நிச்சயம் இவை நடைபெறும். 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர், சரத் பொன்சேகா மற்றும் வேறு பலருக்கு எதிரான, உங்கள் நடவடிக்கையும் அரசியல் நோக்கம் கொண்டது என்பதை மறந்து விடாதீர்கள்.

ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச சமூகம் மற்றும் இந்தியா போன்றவை, நீங்கள் எவ்வாறு அதிகாரங்களை பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பார்க்கிறார்கள். பௌத்த, சிங்களவருக்கு முன்னுரிமை அளிப்பதன் அடிப்படையில் இது பயன்படுத்தப்படும் என்பது வெளிப்படையானது.

இந்துஸ்தான் பத்திரிகைக்கு நீங்கள் அளித்த பேட்டியில், நீங்கள் கூறிய பின்வரும் விடயம் மூலம் தமிழர்களை மட்டுமல்ல, 13வது திருத்தத்தின் முக்கிய நடுவராக இருக்கும் இந்தியாவுக்கும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளீர்கள்.

எங்கள் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் சில பகுதிகள் எங்களால் செயல்படுத்த முடியாது. எனவே எங்களுக்கு சில மாற்றங்கள் தேவை. ஆனால் தமிழ் அரசியல் பிரச்சனை என்று அழைக்கப்படுவதை ஒரே கோணத்தில் மட்டுமே நாம் ஏன் எப்பொழுதும் அணுக முயற்சிக்கிறோம்?

நமது தமிழ் அரசியல்வாதிகள் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து அதிகாரப்பகிர்வு மற்றும் பிற மாதிரிகள் பற்றிப்பேசுகிறார்கள். இறுதியாக சில முக்கிய விடயங்களை உங்களிற்கு அழுத்தம் திருத்தமாகக் கூற விரும்புகிறேன். சுதந்திரம் பெற்றதிலிருந்து, தமிழர்கள் என்று கூறும்பொழுது, அது எப்பொழுதும், முஸ்லிம்களையும் இணைத்துக் குறித்தது. முன்பு முஸ்லிம்களுக்கு என ஓர் அரசியல் கட்சியிருக்கவில்லை. இருப்பினும், ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பத்தை தொடர்ந்து, தெற்கின் உங்கள் அரசியல்வாதிகள், தமிழ் முஸ்லிம்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி, பிரித்து ஆளும் கொள்கையை நடைமுறைபடுத்தியிருந்தனர். அத்துடன் நீங்கள் போரில் வெற்றிகளை பெற்று கொள்வதற்காக, முஸ்லிம்களைத் தமிழர்களுக்கு எதிராக புத்திசாலித்தனமாக பயன்படுத்தினீர்கள்.

தற்பொழுது நீங்கள் முட்டாள்தனமான தமிழர்களை, முஸ்லிம்களுக்கு எதிராக பயன்படுத்தத் தொடங்கியுள்ளீர்கள். இந்த மாற்றத்தை நாம் தினமும் காணுகிறோம். உங்கள் ஜனாதிபதி காலத்தில், வடக்கு மற்றும் கிழக்கில் அல்லது கொழும்பில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே கலவரம் ஏற்பட்டால் அதில் ஆச்சரியபடுவதற்கு ஒன்றுமில்லை.

எதிர்காலத்தில், அதாவது ஐந்து வருடத்தின் பின்னர் மற்றொரு ஜனாதிபதித் தேர்தல் இருக்குமானால், பௌத்தம் பற்றி உங்கள் சொந்தவிளக்கத்தைகொண்டுள்ளநீங்கள், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், மஞ்சள் அங்கிஅணிந்துஒருபௌத்த துறவியாக காணப்பட்டால், யாரும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

முன்புஉங்களுடன் இராணுவத்தில் கடமையாற்றிய உங்கள் தோழர்கள் சிலர், இப்போது மஞ்சள் அங்கி அணிந்திருப்பதை நாங்கள் ஏற்கனவே பார்த்துள் ளோம். குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர், சமூக ஊடகங்க ளில் வெளிவந்துள்ள சில புகைப் படங்களை பார்த்ததன் மூலம், ஒன்றை மட்டும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், உங்களிற்கு எதிராக உங்கள் குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் போட்டியிட முன்வருவதற்கான சாத்திய கூறுகள் பெரிது காணப்படுகின்றன.

உங்கள் வீட்டுக் கூண்டில் உள்ள பறவைகளுக்கு சுதந்திரம் கொடுப்பது போல், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்களிற்கும் சுதந்திரம் தேவை என்பதை மனதில் கொள்ளுங்கள். உங்கள் தகவலுக்கு சுப்பிரமணியம் சுவாமி அல்ல இந்தியா; இந்தியா அல்ல சுப்பிரமணியம் சுவாமி என்பதை புரிந்து கொள்ளுவீர்களென நம்புகிறேன்.

உங்கள் குடும்பம், லஞ்சம் வாங்குவதில் சிறந்தது போல், லஞ்சம் கொடுப்பதிலும் வல்லவர்கள் என்பதை யாவரும் அறிவார்கள்.

நீங்கள் ஒரு சிங்கள பௌத்தராக இருப்பதில் பெருமிதம் கொள்வது போல், தமிழர்களாகிய நாமும் பல மதங்களின் அடிப்படையில் ஈழத் தமிழர்கள் என்பதில் பெருமை கொள்கிறோம்.

(09 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப் பட்டதாரிகளுக்கான விசேட கலந்துரையாடல் இன்று

கிளிநொச்சி, டிசெ. 13

வன்னி மாவட்டத்திலுள்ள அனைத்துப் பட்டதாரிகளுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் மோகனதாஸ் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வன்னி மாவட்டப் பட்டதாரிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வன்னி மாவட்டப் பட்டதாரிகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அத்துடன், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களுக்கான அபிவிருத்திக்கான இணைப்புப் பட்டதாரிகள் சங்கத்தை உருவாக்குதல் குறித்தும் இதன்போது ஆராயப்படவுள்ளது.

## பிள்ளையான் விரைவில் விடுதலை!

கொழும்பு, டிசெ. 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் விரைவில் விடுவிக்கப்படுவார் என்று அரசு அறிவித்துள்ளது.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம நேற்று முன்தினம் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு சிறைவைக்கப்பட்டுள்ள பிள்ளையானைச் சந்தித்து நலன் விசாரித்த நிலையிலேயே இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். (ஐ)

# ராஜபக்ஷ குடும்பத்திடம் 154 அரச நிறுவனங்கள்!

## முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 14

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,அவரது மூத்த சகோதரர்களான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ,பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோரின் கீழ் 154 அரச நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன என ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பல அரச நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வந்துள்ள நிலையில் இதுவரை பாதுகாப்பு அமைச்சராக எவரும் இல்லை. ஆகவே யார் பாதுகாப்பு அமைச்சர் என்பது தொடர்பில் அரசு நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவில்இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்களின் பொறுப்பிலுள்ள அமைச்சுக்களுக்குக் கீழான விடயதானங்கள் உள்ளடக்கிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. அதன்படி முப்படை , பொலிஸ் , மற்றும் அரச புலனாய்வுத்துறை ஆகியன உள்ளடங்கலாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் இருந்த அரச நிறுவனங்களும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ,பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஆகியோரின் பொறுப்பின் கீழ் 154 அரச நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

19 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் படி ஜனாதிபதி அமைச்சுப் பொறுப்பை வகிக்க முடியாது. இந்நிலையில் பாதுகாப்பு அமைச்சராக எவரும் நியமிக்கப்படவில்லை. இருப்பினும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் பல அரச நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன – என்றார். (ஐ)

## 4 ராணுவத்தினர் உள்ளிட்ட 5 பேர் விபத்தில் படுகாயம்!

வவுனியா, டிசெ. 14

வவுனியா – ஓமந்தை – வேப்பங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் நான்கு இராணுவத்தினர் உட்பட ஐந்து பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

புளியங்குளம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கி வந்த இராணுவ வாகனம் ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் பட்டா ரக வாகனத்துடன் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் நான்கு இராணுவத்தினரும், பட்டா ரக வாகனத்தில் பயணித்த ஒருவரும் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## சொய்சாவின் வெற்றிடத்துக்கு பிரியந்த லியனகே நியமனம்

கொழும்பு, டிசெ. 13

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா காலமானதைத் தொடர்ந்து ஏற்பட்ட நாடாளுமன்ற வெற்றிடத்துக்கு வருண பிரியந்த லியனகேயின் பெயர் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பெயரிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா டிசம்பர் 4ஆம் திகதி சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானார்.

இதனையடுத்து 2015 நாடாளுமன்றத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் ரஞ்சித் டி சொய்சாவுக்கு அடுத்த நிலையில் உள்ள வருண பிரியந்த லியனகே அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.

## கோட்டாவுக்கு ஒரு மடல்

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்பொழுது, உங்களை வாழ்த்திய நாடுகள், சர்வதேச தலைவர்கள் யார் யார் என்பதை சற்று பார்ப்போம். சீனா, பாகிஸ்தான், இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவை உங்களுக்கு தமது வாழ்த்துக்களை கூறியுள்ளன.

இருப்பினும், இந்தியாவும் அமெரிக்காவும் உங்களை நிபந்தனைகளுடன் வாழ்த்தியுள்ளது என்பதை நீங்கள் மறுக்க முடியாது. அப்படியானால் பிரித்தானியா, கனடா, ஐரோப்பிய யூனியன் ஆகியவற்றுடன் மற்றைய நாடுகளின் நிலை என்னவாயிற்று? தமிழீழ மக்களது அரசியல் அபிலாஷைகள், பொறுப்புகூறல் ஆகியவற்றின் அடிப்படையில், நீங்கள் தற்பொழுது கடைபிடிக்கும் நிலை, உரை, கதைகளை நீங்கள் தொடர்ந்துகடைபிடிக்க வேண்டும் என்பதையே நாங்கள் விரும்புகிறோம்.

இது ல், வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்களும், புலம் பெயர்வாழ் மக்களும் தங்கள் அரசியல் அபிலாஷைகளின் முக்கியத்துவத்தை மறக்காது இருக்க வைப்பதுடன், அரசியலில் ஆர்வம் இல்லாத தமிழர்களும் தமது அரசியல் உரிமைகளிற்கு குரல் கொடுப்பதற்கு முன்வருவதற்கு நிச்சயம் வழிஅமைக்கும்.

யுத்தம் முடிவடைந்ததிலிருந்து, அண்டைநாடான இந்தியாவும் சர்வதேச சமூகமும் ஸ்ரீலங்காவின் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் குறித்த ஆட்சியாளரின் கபட நாடகங்களை தினமும் அவதானித்த வண்ணம் உள்ளார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள் என நம்புகிறேன்.

உங்கள் தகவலுக்கு ஜேர்மனியின் அடோல்ப் ஹிட்லரை பற்றி யாராவது பேசும்போது அல்லது சிந்திக்கும்போது, உடனடியாக இவர் ஒரு 'சர்வாதிகாரி' என்று நினைக்கிறார்கள். உண்மை என்னவெனில், இவர் ஜேர்மனியில் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் என்பதை பலர் அறிந்திருக்கவில்லை.

ஆனால் காலப் போக்கில், அவர் தன்னை ஓர் சர்வாதிகாரியாக, அரசாங்க வழிமுறைகளைப் பாவித்து மாற்றிகொண்டார். இறுதியில், ஹிட்லரை ஆதரித்த மக்கள் அவரை நாம் ஏன் தெரிவு செய்தோம் என வருத்தப்பட்டனர்.

நீங்கள் ஹிட்லரின் வாழ்க்கை வரலாற்றைப் முன்பு படித்திருக்காவிட்டால், ஒரு முறை படியுங்கள். உங்களை அவமானப்படுத்துவது என் நோக்கம் அல்ல. உங்கள் இருவருக்கும் இடையில் பல ஒற்றுமைகள் காணப்படுவதை நீங்களே கண்டு கொள்வீர்கள். உதாரணத்திற்கு ஜெர்மன் குடியுரிமை விடயத்தில் ஹிட்லருக்கு சர்ச்சைகள் இருந்துள்ளன.

இறுதியாக, ஐசாக் நியூட்டனின் 'ஈர்ப்பு' கோட்பாட்டை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என நம்புகிறேன்! அவரது கோட்பாட்டிற்கு அமைய, 'மேலே செல்வது யாவும் கீழே வர வேண்டும்' என்பதை நிரூபிக்கிறது. உங்கள் எல்லா முயற்சிகளுக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

(முற்றும்)

## கிழக்குத் தமிழ் ஊடகவியலாளரை விசாரணைக்கு அழைக்கும் பொலிஸ்

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளரை விசாரணைக்கு வருமாறு ஏறாவூர் பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் செ.நிலாந்தனுக்கே இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

செங்கலடி பிரதேச செயலாளர் வில்வரெட்ணத்துக்கு எதிராக மட்டக்களப்பு கச்சேரிக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஊடகங்களில் செய்தி வெளியிட்டமை குறித்து பிரதேச செயலாளரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்தே அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறும் ஊழல் தொடர்பாக செய்திகளை வெளியிட்டு வரும் சுதந்திர ஊடகவியலாளர் நிலாந்தன் மீது கடந்த காலங்களில் இதுபோன்ற விசாரணைகள் நான்கு தடவைக்கு மேல் நடைபெற்றுள்ளன.




## ரி –20 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசைப் பட்டியல் வெளியீடு

கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பாரத்துக் காத்திருந்த ரி – 20 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

சிறப்பாக விளையாடும் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டு வருகிறது.

அதன்படி, தற்போது ரி – 20 உலகக்கிண்ணத்தை முன்னிட்டு ஒவ்வொரு நாடுகளும் ரி – 20 தொடர்களை நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், ஐ.சி.சியின் ரி – 20 துடுப்பாட்ட வீரர்களின்ன் புதிய தரப்படுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த தரவரிசைப் பட்டியல்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

இந்தப் பட்டியலில், பாகிஸ்தானின் பாபர் அசாம் தொடர்ந்தும் 879 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கின்றார்.

ஆஸ்திரேலியாவின் ஆரோன் பின்ஞ், 810 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் டாவிட் மாலன் 782 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

நியூஸிலாந்தின் கொலின் முன்றோ 780 புள்ளிகளுடன் நான்காவது இடத்தை பிடித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் கிளென் மேக்ஸ்வெல், 766 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான ரி – 20 தொடரில், இரண்டு அரைச்சதம் அடித்த இந்திய வீரரான லோகேஷ் ராகுல் மூன்று இடங்கள் முன்னேறி, 734 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தை பிடித்துள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் எவீல் லீவிஸ் ஏழு இடங்கள் ஏற்றம் கண்டு 699 புள்ளிகளுடன் ஏழாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் ஹஸ்ரதுல்லா ஸஸாய் இரண்டு இடங்கள் பின்தள்ளப்பட்டு 692 புள்ளிகளுடன் எட்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

இந்தியாவின் ரோஹித் சர்மா ஒரு இடம் பின் தள்ளப்பட்டு 686 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தை பிடித்துள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான ரி – 20 தொடரில், முதல் போட்டியிலும், மூன்றாவது போட்டியிலும் அரைச்சதம் அடித்த இந்திய அணியின் விராட் கோஹ்லி, 15ஆவது இடத்தில் இருந்து 685 புள்ளிகளுடன் 10ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.




## ஐ.பி.எல். ஏலத்தில் முதல் முறையாக தமிழில் வர்ணனை

இந்தியாவில் நடைபெறும் ரி – 20 கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயத்திற்கான தயாா்படுத்தல்கள் தற்போது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டு வீரர்களை உள்ளடக்கிய ஐ.பி.எல் ரி – 20 கிரிக்கெட் தொடர், கடந்த 2008ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இந்தியாவில் சிறந்த உள்ளூர் வீரர்களை இனங்காண்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இத்தொடர், சர்வதேச வீரர்களின் வருகையால், இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் உள்ள கிரிக்கெட் இரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

இதற்கமைய ஐ.பி.எல். தொடரின், 13ஆவது அத்தியாயத்திற்காக தற்போது ஒவ்வொரு அணிகளும் தங்களின் அணிகளை வலுப்படுத்தும் வகையில், புதிய பயிற்சியாளர்களை நியமிப்பதோடு, திறமையான வீரர்களுக்கும் வலைவிரிக்கின்றன.

2020ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், இத்தொடர் ஏலம் எப்போது நடக்கும், எத்தனை மணிக்கு நடக்கும், எத்தனை வீரர்கள் பங்கேற்பார்கள் என்பது தொடர்பான விவரங்கள் வெளியாகியுள்ளன.

இதற்கு முன்னைய ஐ.பி.எல் தொடருக்கான வீரர்கள் ஏலம் அனைத்தும் பெங்களூரில்தான் நடந்தது. ஆனால், இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் புதிய தலைவர் கங்குலி பதவி ஏற்றுள்ளதையடுத்து இந்த முறை ஏலம் கொல்கத்தாவுக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்படி வரும் 19ஆம் திகதி ஐ.பி.எல். ஏலம் நடைபெறவுள்ளது

முதலில் திட்டமிட்டபடி ஏலம் 19ஆம் திகதி காலையில் நடப்பதாக இருந்தது. ஆனால், இரசிகர்கள் அதிகமானோர் ஏலத்தைக் கண்டுகளிக்க வேண்டும் என்பதற்காக ஐ.பி.எல் ஏலத்தின் நேரம் காலை 10 மணிக்குப் பதிலாக பிற்பகல் 2.30 மணிக்கு ஏலம் தொடங்குகிறது.

வழக்கமாக வீரர்கள் ஏலம் தொடர்பான அறிவிப்புகள் ஆங்கிலம், ஹிந்தி ஆகிய இரு மொழிகளில் மட்டுமே வர்ணனை செய்யப்படும். ஆனால், முதல் முறையாகப் பிராந்திய மொழிகளாகத் தமிழ், தெலுங்கு, வங்காளம், கன்னடம் ஆகிய மொழிகளில் நேரலை வர்ணனை செய்யப்பட உள்ளது.

இந்த ஐ.பி.எல். ஏலத்தில் மொத்தம் 8 அணிகளின் நிர்வாகிகள் பங்கேற்கின்றனர். இதில் ஏலத்துக்காக வெளிநாடு, உள்நாடு என மொத்தம் 971 வீரர்கள் தங்களைப் பதிவு செய்திருந்தார்கள். ஆனால், இதில் 332 பேர் மட்டுமே ஏலத்துக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் ஐ.பி.எல். போட்டியில் ஏற்கெனவே விளையாடிய அனுபவம் உடைய 19 இந்திய வீரர்கள், 24 புதிய வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இதில் மேற்கிந்திய தீவுகள் வீரர் கேஸ்ரிக் வில்லியம்ஸ், பங்களாதேஷ் அணித் தலைவர் முஷ்பிகுர் ரஹிம், ஆஸ்திரேலியச் சுழற்பந்து வீச்சாளர் ஆடம் சம்பா ஆகியோர் முதல் முறையாக இடம் பெறுகிறார்கள்.

8 அணிகளிலும் தற்போது 73 வீரர்களுக்கான காலியிடங்கள் இருக்கின்றன. இதில் அதிகபட்சமாக 29 வெளிநாட்டு வீரர்கள் இடம் பெறுவார்கள்.

இந்திய வீரர்களைப் பொறுத்தவரை கொல்கத்தா அணியில் இருந்து விடுவிக்கப்பட்ட ரொபின் உத்தப்பாவுக்கு அதிகபட்சமாக 4 கோடி ரூபா அடிப்படை விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல ஐ.பி.எல். போட்டிகளாகக் கோடிக்கணக்கான விலைக்கு ஏலம் போன ராஜஸ்தான் வீரர் ஜெய்தேவ் உனட்கட்டின் அடிப்படை விலை 2.5 கோடி ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவர் கடந்த முறை 21 கோடி ரூபாவுக்கு ஏலம் எடுக்கப்பட்டார்.

வெளிநாட்டு வீரர்களைப் பொறுத்தவரை ஆஸ்திரேலிய வீரர் மேக்ஸ்வெலுக்கு அடிப்படை 5 கோடி ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், தற்போது ஓய்வில் இருப்பதால் அவர் இத்தொடரில் பங்கேற்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இது தவிர பெட் கம்மின்ஸ், ஜோஷ் ஹேசல்வுட், மிட்ல் மார்ஷ், டேல் ஸ்டெயின், மெத்தியூஸ் ஆகியோரின் விலையும் 5 கோடி ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக ஆரோன் பிஞ்ச், கிறிஸ் லின், ஜேஸன் ரோய், மோர்கன், ரொபின் உத்தப்பா ஆகியோர் முதல் கட்டமாக ஏலத்தில் அனுப்பப்படுவார்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதில் மோர்கன், ஜேஸன் ரோய்க்கு அதிகமான மவுசு இருக்கும்.

அதன்பின் 2ஆவது கட்டத்தில் மேக்ஸ்வெல், கிறிஸ் மோரிஸ், பெட் கம்மின்ஸ் அதைத் தொடர்ந்து மற்ற வீரர்கள் ஏலம் விடப்படுவார்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகபட்சமாக கொல்கத்தா அணி 11 வீரர்களை ஏலம் எடுக்க உள்ளது. அந்த அணியின் கைவசம் 90 கோடி ரூபா உள்ளது. ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியிடம் 74 கோடி ரூபா கைவசம் உள்ளது. அந்த அணி 11 வீரர்களை ஏலம் எடுக்க உள்ளது. ரோயல் சேலஞ்சர்ஸ் வசம் 71 கோடி ரூபாய் உள்ளது. அந்த அணி 12 வீரர்களை ஏலம் எடுக்க உள்ளது.

2021ஆம் ஐ.பி.எல். ஏலத்தில் அனைத்து அணிகளும் 5 வீரர்களை மட்டும் தக்கவைத்துக்கொண்டு இதர வீரர்களை ஏலத்தில் மட்டுமே தேர்வு செய்யமுடியும். இதனால் இந்த வருட ஐ.பி.எல். ஏலம் முக்கியத்துவம் பெறுகிறது.

அடுத்த வருடப் பெரிய ஏலத்தை மனத்தில் கொண்டு இந்த வருட ஏலத்தில் வீரர்களை அணிகள் தேர்வு செய்யவுள்ளன.

அடுத்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் ரி – 20 உலகக்கிண்ண தொடர் நடைபெறவுள்ளதால், எதிர்வரும் ஐ.பி.எல். தொடர் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது.

கடந்த 12ஆவது ஐ.பி.எல் தொடருக்கான ஏலத்தில் தமிழக வீரர் வருண் சக்கரவர்த்தியை 21 கோடி ரூபாய்க்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி எடுத்தது. அதே விலைக்கு, ஜெய்தேவ் உனத்கட்டை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி ஏலத்தில் எடுத்தது.

இவர்கள் இருவரும் தான், கடந்த ஐ.பி.எல். ஏலத்தில் அதிக விலை போனவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## லா லிகா லீக் உதைபந்து தொடரின் தூதராக ரோஹித் சர்மா நியமனம்!


ஸ்பெயினில் நடைபெறும் உதைபந்து கழகங்களுக்கிடையிலான புகழ்பெற்ற லா லிகா உதைபந்து லீக் தொடரின், இந்தியாவுக்கான முதல் தூதராக இந்திய கிரிக்கெட் அணியின் துணைத் தலைவர் ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

உதைபந்துப் போட்டிகளுக்கு அந்த விளையாட்டோடு தொடர்பில்லாத மற்றொரு விளையாட்டு வீரர் தூதராக நியமிக்கப்படுவது இதுதான் முதல் முறையாகும்.

கடந்த 2017ஆம் ஆண்டிலிருந்து லா லிகா கால்பந்து லீக்கில் உள்ள பிரபல அணிகளான பார்சிலோனா, ரியல் மட்ரிட் கழக அணிகள் இந்தியாவில் உதைபந்து விளையாட்டைப் பரப்ப பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

இதற்கமைய கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் அலுவலகத்தைத் திறந்து மக்களிடம் உதைபந்து விளையாட்டைப் பரப்ப நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன் ஒருபகுதியாக ரோஹித் சர்மாவைத் தூதராக நியமித்துஉதைபந்துவிளையாட்டைப்பரப்பத்திட்டமிட்டுள்ளது.

லா லிகா உதைபந்து லீக்கின் இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டது குறித்து ரோஹித் சர்மா கூறுகையில், இந்தியாவில் கால்பந்து விளையாட்டுக்கு உலகளாவிய வளர்ச்சி இருக்கிறது, மக்களிடம் வரவேற்பும் இருக்கிறது. இதைத் தூங்கிக்கொண்டிருக்கும் அசுரன் என்று கருதத் தேவையில்லை. கடந்த 5 ஆண்டுகளாக இந்தியாவில் உதைபந்து விளையாட்டுக்கான வளர்ச்சி அதிகரித்து வருகிறது. உதைபந்து விளையாட்டின் மோகமும் இளைஞர்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.




லா லிகா உதைபந்து தொடரின் இந்தியத் தூதராக நான் நியமிக்கப்பட்டது எனக்குப் பெருமையாக இருக்கிறது. ஸ்பெயின் நாட்டு உதைபந்து அணியின் நட்சத்திர வீரர்களைப் பார்ப்பதும் எனக்கு ஊக்கமாக அமையும். இந்தியாவில் உள்ள உதைபந்து ரசிகர்களை லா லிகாவின் தூதராகச் சென்று சந்திப்பதில் ஆர்வமாக இருக்கிறேன்.

லா லிகா உதைபந்து தொடர் விளம்பர தூதராக நியமிக்கப்பட்டது மகிழ்ச்சி. இந்திய கிரிக்கெட் அணி வீரர்களான லோகேஷ் ராகுல், ஹர்திக் பாண்ட்யா, ஸ்ரேயாஸ் ஐயர் உள்ளிட்டோர் உதைபந்து போட்டிகளை தீவிரமாக பார்ப்பார்கள். மனம் கவர்ந்த உதைபந்து நட்சத்திரங்களின் 'ஹேர் ஸ்டைலை' இவர்களும் பின்பற்றுவர்.

பிரான்ஸ் முன்னாள் உதைபந்து நட்சத்திரம் ஷிடேன், எனக்கு பிடித்த வீரர். இவரது திறமையான விளையாட்டிற்காகவே, ஸ்பெயினில் நடந்த கழக அணிகளுக்கான போட்டிகளை பார்க்கத் துவங்கினேன். ரியல் மட்ரிட் கழக அணி மிகவும் பிடிக்கும். அணியில் அனைத்து வீரர்களும் ஒன்றிணைந்து செயற்படுவது, உதைபந்து மீதான ஆர்வம் எனப் பல விடயத்தில் ரியல் மட்ரிட் போட்டிகளை இரசித்துப்பார்ப்பேன்.

டோனி முதற்தர இந்திய அணியில் போட்டிகளுக்கு தயாராகும் போது, கால்பந்து விளையாடுவோம். நான் மத்திய கள வீரராகச் செயற்பட விரும்புவேன். உதைபந்தில் இந்த இடம் மிகவும் கடினமானது. நமது அணியில் டோனி தான் 'நம்பர் – 1' உதைபந்து வீரர். கடந்த சில ஆண்டுகளாக இந்தியாவில் உதைபந்து அசுர வளர்ச்சியை எட்டி உள்ளது.

இந்திய அணி விளையாடும் போட்டிகள், ஐ.எஸ்.எல்., லீக் போட்டிகளை பார்த்து இதை தெரிந்து கொள்ளலாம். கிரிக்கெட்டிற்கு ஐ.பி.எல்., போல, இளம் கால்பந்து வீரர்களுக்கு ஐ.எஸ்.எல்., தொடர் வாய்ப்பு அளிக்கிறது' என கூறினார்.

# 3 வாரங்களுக்குள் குடாநாட்டில் டெங்கைக் கட்டுப்படுத்தத் திட்டம்



## நேற்று நடந்த கலந்துரையாடலில் தீர்மானம்

யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் டெங்கு தொடர்பான அவசர கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் முப்படையினர் மற்றும் மாவட்டத்திலுள்ள சகல அரச திணைக்களத் தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.

இந்தக் கலந்துரையாடலில் அடுத்த மூன்று வாரங்கள் டெங்கை ஒழிப்பதற்கான அவசர காலமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் டெங்கு பரவும் அபாயம் உள்ள இடங்களைக் கண்டறிந்து காணி உரிமையாளர் அல்லது வீட்டு உரிமையாளருக்கு எதிராக உடனடியாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடு பரிந்துரைக்கப்பட்டது.

மேலும் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் காணப்படும் குப்பைகள் உள்ள இடங்கள் தொடர்பாக விசேட கவனமெடுத்து அவற்றை உடனடியாக அகற்றுதல் மற்றும் பொதுமக்கள் தமது வீட்டிலுள்ள குப்பைகளைத் தரம் பிரித்து வழங்கவேண்டும் என்பதுடன் சுகாதாரப் பரிசோதகர்கள் கிராம சேவகர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சிச் சபைகள் இணைந்து பொதுவான ஒரு செயற்றிட்டத்தைச் செய்வதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டது.

அதேபோல இந்தத் திட்டச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களுடன் பொலிஸார் உடனடியாக இணைந்து செயற்படவேண்டுமென்றும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்கமைய எதிர்வரும் மூன்று வாரங்களுக்குள் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கிராமங்கள், குறிப்பாக வட்டாரங்களில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் குப்பைத் தொட்டிகள் அமைக்கப்படுமென்றும் முடிவு எட்டப்பட்டது.

இதுதொடர்பாக பொதுமக்களுக்கு அவசர தொலைபேசி இலக்கமாக 021 222 5000 என்ற இலக்கம் வழங்கப்பட்டது.

டெங்கு தொடர்பாகப் பொதுமக்கள் இந்தத் தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்தால் அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொது மக்கள் பாவனையில் இல்லாதிருக்கும் வெற்றுக் காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு துப்பரவாக்கும் பணிகளை உள்ளூராட்சி சபைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும், அவ்வாறான வெற்றுக் காணிகள் கண்டறியப்படுமிடத்தே அவை தொடர்பாக உடனடியாக எச்சரிக்கை அறிவிப்பு ஒட்டப்பட வேண்டுமென்றும், அவ்வாறு இல்லாது போனால் அதற்கான தண்டப் பணம் வருடாந்த சோலை வரியுடன் இணைத்து அறவிடப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வவுனியாவில் ரயிலுடன் மோதி யானை உயிரிழப்பு



வவுனியா, டிசெ. 14

வவுனியா, செட்டிக்குளம் பீடியா பண்ணைப் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு யானை உயிரிழந்துள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் மன்னார் நோக்கிச் சென்ற ரயிலுடனேயே தண்டவாளத்தில் நின்ற யானை மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

அந்தப் பகுதிக்கு வருகை தந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் யானையைப் பார்வையிட்டனர். அந்த யானை 20 வயதுடையது என அவர்கள் தெரிவித்தனர்.

செட்டிக்குளம் பகுதியில் ரயிலுடன் மோதுண்டு யானைகள் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகமாக இடம்பெற்று வருகின்றன.

செட்டிக்குளம் பெரியகட்டுப் பகுதியில் அமைக்கப்பட்ட யானைகள் தண்டவாளத்தில் வரும்போது சமிக்ஞை காட்டும் இயந்திரம் செயலிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தனியார் கல்வி நிலையங்களுக்கான தடை மேலும் ஒரு வாரத்துக்கு நீடிப்பு

வவுனியா, டிசெ. 14

டெங்கு நோய்த் தாக்கம் காரணமாக வவுனியாவில் தனியார் கல்வி நிலையங்கள் மறு அறிவித்தல் வரை இயங்குவதற்குப் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தால் கடந்த 7ஆம் திகதி தொடக்கம் விதிக்கப்பட்ட தடை உத்தரவு மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தீவிரமடைந்துள்ளது. 550 இற்கும் மேற்பட்டோர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத் தடையுத்தரவு விதிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தனியார் கல்லூரி உரிமையாளருக்கான சந்திப்பு நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில்வவுனியா நகரசபை உபதலைவர், செயலாளர், உறுப்பினர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், வைத்தியர்கள், நகரசபைஊழியர்கள், தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள், தனியார் கல்லூரி ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது தனியார் கல்லூரி உரிமையாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் டெங்கின் தாக்கம் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டதுடன் தனியார் கல்லூரிகளை மூடியதன் காரணமும் விவரமாக தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் தனியார் கல்லூரி உரிமையாளர்களும் அவர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைத் தெரிவித்தனர்.

சுமார் இரு மணித்தியாலங்களுக்கு மேலாக இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் பின்னர் தனியார் கல்லூரிகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதற்குக்கான தடையுத்தரவை மேலும் ஒரு வாரத்துக்கு நீடிப்பதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ஐ – 100)

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிணறுகளைச் சுத்தமாக்கும் பணி



முல்லைத்தீவு, டிசெ. 14

முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரியின் பணிப்பின் பெயரில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிணறுகளைச் சிவில் பாதுகாப்புத் திணைக்கள ஊழியர்கள் துப்பரவு செய்து இறைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு வசந்தபுரம்,மற்றும்விசுவமடு கிழக்கு, பாரதிபுரம், மாணிக்கபுரம் போன்றதாழ்நிலப் பகுதிகளில் மக்களின்கிணறுகள் அனைத்தையும் வெள்ளம் மூடிபாய்ந்துள்ளது.

இதானல் மக்கள் குடிதண்ணீரினை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங் களை எதிர்கொண்டுள்ளனர்.

இவ்வாறு இனம் காணப்பட்ட மக்களின் கிணறுகளை இறைத்து துப்பரவு செய்யும் பணியிலும், கிணறுகளுக்குக் குளோறின் போடும் பணியிலும் முல்லைத்தீவு மாவட்ட சிவில்பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.



# யாழ்.மாநகர சபையின் பட்ஜெட் 2 ஆவது முறையும் தோற்கடிப்பு

## தனக்குள்ள அதிகாரத்தால் அனுமதி அளித்தார் முதல்வர்



யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நேற்று இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டது.

இரண்டு தடவைகள் வரவு – செலவுத் திட்டம் சபையில் தோற்கடிக்கப்பட்டாலும் தனக்கு உள்ள அதிகாரத்துக்கு அமைவாக வரவு – செலவுத் திட்டம் முறைப்படி அங்கிகரிக்கப்பட்டதாக முதல்வர் இமானுவேல் ஆனல்ட் பிரகடனப்படுத்தினார்.

நேற்று யாழ்ப்பாணம் மாநகர சபையின் சிறப்பு அமர்வு முதல்வர் இமானுவேல் ஆனல்ட் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இன்றைய அமர்வில் 43 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கலந்துகொண்டவர்களுள் வரவு செலவு திட்டத்திற்கு, 19 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 24 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்துள்ளனர்.

வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியமக்கள்முன்னணியின் 12 உறுப்பினர்கள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 10 உறுப்பினர்கள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 2 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் கடந்த மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்று 28 ஆம் திகதி முதலாவது வாக்கெடுப்பு இடம்பெற்றிருந்தது.

அதன் போது வரவு – செலவுத் திட்டத்திற்கு 16 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 21 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். அதே வேளை 7 உறுப்பினர்கள் சபை அமர்வில் கலந்துகொண்டிருக்கவில்லை.

தொடர்ந்து, கடந்த 9 ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வின் மாநகர சட்டம் 215ஏ இன் பிரகாரம் நேற்று வரவு – செலவுத் திட்டம் மீண்டும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டிருந்தது.

இந்த அமர்வின்போது உறுப்பினர்களிடையே கடும் கருத்து மோதல்களும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ராஜித சேனாரத்னவுக்கு எதிராக சி.ஐ.டியில் நேற்று முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 14

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப்பேச்சாளர் மொஹமட் முஸம்மிலினால் நேற்று இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உரிய முறையில் அரசுடமை ஆக்கப்படாத நெவில் பெர்னாண்டோ தனியார் மருத்துவமனைக்கு அரசிதின் நிதியைப் பயன்படுத்தினார் எனத் தெரிவித்தே இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்றுக் காலை பொலிஸ்நிதிமோசடிவிசாரணை பிரிவில் முறைப்பாடு செய்யச் சென்றிருந்தபோதும் அதனை ஏற்க அவர்கள் மறுப்பு தெரிவித்தனர் என மொஹமட் முஸம்மில் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்தே தாம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## ஐ.தே.க. செயற்குழுவை உடனடியாகக் கூட்டுக!

### ரணிலுக்கு அவசர கடிதம்

கொழும்பு, டிசெ. 14

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கூட்டுமாறு அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 26 பேர் கட்சித் தலைவர் ரணிலுக்கு அவசரக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

கட்சியின் தலைமைத்துவம் குறித்து இறுதி முடிவை எடுக்க இந்தக் கூட்டத்தைக் கூட்டுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (ஐ)

## வவுனியா மாவட்ட செயலகம் முன் பெண்கள் விழிப்புணர்வு ஊர்வலம்

வவுனியா, டிசெ. 14

சமத்துவமான தலைமுறை, வன்புணர்வுக்கு எதிராய் எழுந்து நிற்போம் எனும்தொனிப்பொருளில் பெண்களால் ஊர்வலம் ஒன்று நேற்று வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகமும் ஒபர் சீலோன் மற்றும் பொஸ்டோ நிறுவனமும் இணைந்து யு.எஸ். எய்ட் மற்றும் யு.என்.டி.பி. நிறுவனங்களின் நிதி அனுசரணையுடன் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் ஒரேஞ் நிற குடையை தாங்கியிருந்தனர்.

வவுனியா மாவட்ட செயலக முன்றலில் ஆரம்பமான விழிப்புணர்வு பேரணி வவுனியா மாவட்ட செயலக உள்ளக வீதியூடாக மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தைச் சென்றடைந்து கேட்போர் கூடத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. (ஐ – 00)






## இஸ்லாமியத் தீவிரவாதத்தை இல்லாதொழிக்க இராணுவத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு

### பிரதமர் மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 14

இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்பு ஆகிய இரண்டும் பாரிய சவால்களுக்கு உட்பட்டுள்ள நிலையில் மீண்டும் ஆட்சியை பொறுப்பேற்றுள்ளோம். தாக்கம் செலுத்தியுள்ள புதிய இஸ்லாமிய தீவிரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு இராணுவத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும். நாட்டு மக்கள் என்றும் இராணுவத்தினருக்குக் கௌரமளிப்பார்கள் எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதுகாப்பு சேவைக் கட்டளை மற்றும் இராணுவக் கல்லூரி பட்டதாரிகளுக்குப் பட்டமளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை தாமரை தடாகக் கலையரங்கில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

விடுதலை புலிகள் அமைப்பைமுழுமையாக இல்லாதொழித்த இராணுவத்தினருக்கு ஆயுதமேந்திய தலைவராகச் செயற்பட்டமையை இட்டு சர்வதேச மட்டத்தில் பெருமையடைந்துள்ளேன். இதன் சிறப்பு இராணுவத்தினரையே சாரும்.

தீவிரவாதம் சர்வதேச மட்டத்தில் தாக்கம் செலுத்தியிருந்த வேளை யுத்தத்தை நாம் வெற்றிக் கொண்டோம். அது சர்வதேசத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. 2008 ஆம் ஆண்டு அமெரிக்காவின் எஸ். பி. ஐ நிறுவனம் விடுதலைப் புலிகள் அமைப்பு பலம் வாய்ந்த ஒரு தீவிரவாத அமைப்பு என்று உத்தியோகப்பூர்வமாக அறிவித்தது. விடுதலைப் புலிகளின் தாக்கம் அமெரிக்காவில் இடம் பெறவில்லை. ஆனால் அவர்கள் அந்த அமைப்பைச் சர்வதேசப் பலம் வாய்ந்த அமைப்பாகக் கருதினர்.

2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பு முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டது. அதுவரை காலமும் 30 வருட கால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாது என்று பல நாடுகளின் இராஜதந்திரிகளும் குறிப்பிட்டார்கள். முடியாத ஒரு விடயத்திற்கு முயற்சிகளை மேற்கொள்வது பயனற்றது என்றும் எடுத்துரைத்தார்கள். இருப்பினும் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என்ற இலக்கில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அந்த வேளையிலும் பல நெருக்கடிகள் காணப்பட்டன.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து யுத்தத்தை விரைவாக முடிவிற்கு கொண்டு வந்து அபிவிருத்தியில் முன்னேற வேண்டும் என்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. இராணுவம், புலனாய்வுப் பிரிவு பலப்படுத்தப்பட்டது. பாதுகாப்புச் செயலாளராக கோட்டாபய நியமிக்கப்பட்டு யுத்தம் துரிதகரமாக நியமிக்கப்பட்டது. இன்று அவரை நாட்டு தலைவராக மக்கள் தெரிவு செய்துள்ளமை பாரிய வெற்றியாகும் – என்றார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2019 இல் வெளியிடப்பெற்றது.